விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 359 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 27 புதன்கிழமை (13.12.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

கொரிய அரசின் நிதியுதவியில்

## வட மாகாணத்தில் சுற்றுலா அபிவிருத்தித் திட்டம்

(யாழ்ப்பாணம்)

கொரிய அரசாங்கத்தின் நிதியுதவியில் வட மாகாணத்தை மையமாகக் கொண்டு சமுதாய மட்ட சுற்றுலா அபிவிருத்திக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான உடன்பாட்டு ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டுள்ளது.

கொரிய அரசாங்கத்தின் 2,172 பில்லியன் வொன் நிதியனுசரணையுடன், கொரியா சுற்றுலா நிறுவனம் மற்றும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்கு இடையிலான உடன்பாட்டு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக கடந்த ஜனவரி

15

## கிளிநொச்சியில் சூரிய மின்சக்தி ஒப்பந்தங்கள் மூடிமறைப்பு

அநுர குமார குற்றச்சாட்டு



(கொழும்பு)

கிளிநொச்சி பூநகரி குளத்தில் சூரிய மின்சக்தி உற்பத்தியை மேற்கொள்வது குறித்து முழுமையான விளக்கத்தினை மக்களுக்கு வழங்க வேண்டுமென தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

15

நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவில்

# புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டம்

(கொழும்பு)

நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவில் இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டம் ஒன்றை ஆரம்பிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

(02ஆம் பக்கம் பார்க்க)

வவுனியாவில்

## பாடசாலைகள் உடைத்து திருட்டு

(வவுனியா)

வவுனியா, சாளம்பைக் குளம் பகுதியில் இரு பாடசாலைகள் உடைக்கப்பட்டு அங்கிருந்த சில பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக பூவரசன்குளம் பொலி

15

யாழில் சீனிக்கு

## செயற்கை தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் சீனியை பதுக்கி செயற்கை தட்டுப்பாடு ஏற்படுத்தப்படுவதாக யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

15

## வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலய நிர்வாகத்தினர்

பொலிஸாரால் அழைக்கப்பட்டு மீண்டும் விசாரணை

(வவுனியா)

வவுனியா வடக்கு, வெடுக்குநாறி ஆதி சிவன் ஆலய நிர்வாகத்தினர் நெடுங்கேணி பொலிஸாரால் அழைக்கப்பட்டு நேற்று மீண்டும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

15

வற் வரி அதிகரிப்பினால்

## ஒவ்வொரு பொருட்களின் விலையும் 50 தொடக்கம் 60 வீதம் வரை உயரும்

(கொழும்பு)

வற் வரி திருத்தத்தின் மூலம் ஒவ்வொரு பொருட்களின் விலையும் 50 தொடக்கம் 60 வீதம் வரை அதிகரிக்குமென ஸ்ரீலங்கா ஐக்கிய வர்த்தகர் சங்கத்தின் தலைவர் டானியா அபேசுந்தர தெரிவித்துள்ளார்.

வர்த்தகர்களிடம் இருந்து வரி வசூலிக்க அரசாங்கம் விரும்பினால், வணிகங்களை ஆதரிக்க வேண்டும்.

எனினும் வர்த்தகர்களிடம் மட்டும் வரி வசூலிக்க அரசு முயற்சித்தால், எப்படி வரி செலுத்துவது என்ற பிரச்சினை ஏற்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

15

## ஐ.எம்.எப் கடன் தவணை நிச்சயம் அங்கீகரிக்கப்படும்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தினால் இந்த நாட்டில் வழங்கப்படும் விரிவான கடன் வசதி தொடர்பான இரண்டாம் தவணைகள் நிச்சயமாக அங்கீகரிக்கப்படும் என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அமைச்சரவை அறிவிப்புகளை வெளியிடும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம்

15

## பட்ஜெட்

இறுதி வாக்கெடுப்பு இன்று மாலை

(கொழும்பு)

2024ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இறுதி வாக்கெடுப்பு இன்று மாலை நடைபெறவுள்ளது.

நிதி அமைச்சர் என்ற வகையில்

15

## முட்டையின் விலை சந்தையில் அதிகரிப்பு

இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்படும்

(கொழும்பு)

சந்தையில்முட்டை விலை அதிகரிக்கப்பட்டுள்ளதன் காரணமாக அவற்றை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை

02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முட்டை...

ஏற்படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஜனவரி மாதத்தில் இருந்து முட்டை இறக்குமதியை நிறுத்துவதற்கு முன்னர் திட்டமிடப்பட்டிருந்ததாக அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜா-எலயில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ இதனை தெரிவித்தார்.

(ம-7)


**உருத்திரபுர நாயகி உடனுறை உருத்திரபுரீசுவரர் சிவாலயம்**
**உருத்திரபுரம், கிளிநொச்சி**

## முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

எமது ஆலயத்தின் முகாமையாளராக கடமையாற்றுவதற்கு விருப்பமும், ஆர்வமும் உடையோரிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரி நிற்கிறோம். விண்ணப்பிக்க விரும்புவோர், தமது முழுமையான விவரங்களை உள்ளடக்கிய சுயவிவரக் கோவை ஒன்றை, எதிர்வரும் 2023.12.26 ஆம் திகதிக்கு முன்னர் "செயலாளர், ஆலய பரிபாலன சபை, உருத்திரபுரீசுவரர் சிவாலயம், உருத்திரபுரம், கிளிநொச்சி" என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ, ஆலய கருமபீடத்தில் நேரடியாகவோ சமர்ப்பிக்கலாம்.

**நிபந்தனைகள்**

1. ஆலயத்தை அண்மித்த பகுதிகளில் வசிப்பவர்களுக்கும், முன்னனுபவம் உள்ளவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.
2. வயதெல்லை 35 - 55
3. சுய ஒழுக்கமும் நன்னடத்தையும் உள்ளவராகவும், சமயாசார விதிமுறைகளோடும், ஆலய நடைமுறைகளோடும் இணங்கி ஒழுகுபவராகவும் இருத்தல் வேண்டும்.
4. ஆகக்குறைந்தது க.பொ.த சாதாரண தரத்தில் (கணித பாடம் உள்ளடங்கலாக) சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும்.

கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் அனைத்தும் பரிசீலிக்கப்பட்டு, நேர்முகத் தேர்வின் மூலம் முகாமையாளர் தெரிவு இடம்பெறும். கடமை நேரம், சம்பளம் என்பவை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**இவ்வண்ணம் இறைபணியில்**
**ஆலய பரிபாலன சபையினர்**
**உருத்திரபுரீசுவரர் சிவாலயம்,**
**உருத்திரபுரம், கிளிநொச்சி.**

(18211)


# கந்தர்மடம், ஆத்திசூடி கோவிலடியில் இரவுநேர வழிப்பறி அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். கந்தர்மடம், ஆத்திசூடிப்பிள்ளையார் கோயில் பிரதேசம் மற்றும் அதனைச் சூழவுள்ள ஒழுங்கைகளில் இரவு நேர வழிப்பறிச் சம்பவங்கள் அதிகரித்துள்ளது.

இரவு நேரங்களில் பயணிப்போரை வழிமறிக்கும் வழிப்பறிக்கும்பல் கூரிய ஆயுத முனையில் அச்சுறுத்தி வழிப்பறியில் ஈடுபடுகின்றனர்.

நேற்று இரவு ஆத்திசூடிப் பிள்ளையார் கோவிலடியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞனை வழிமறித்த இருவர் குறித்த இளைஞனிடம் இருந்து ஒருதொகைப் பணத்தை அபகரித்துள்ளனர்.

இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.(ம-7)

## புதுப்பிக்க...

யாழ்ப்பாணம் நெடுந்தீவு, நயினாதீவு மற்றும் அனலைதீவு ஆகிய தீவுகளில் உள்ள மக்களுக்கு மின்சார வசதியினை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் 11 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு இந்திய அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி, குறித்த திட்டத்தை அமுல்படுத்துவதற்காக இந்திய ஒப்பந்தக்காரர்களிடம் விலைமனு கோரப்பட்டுள்ளது.

அதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளை மதிப்பீட்டுக்கு உட்படுத்தி அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளின் கீழ் குறித்த ஒப்பந்தத்தை U-Solar Clean Energy Solutions (Pvt) Ltd என்ற கம்பனிக்கு வழங்குவதற்காக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகரவினால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.(ம)


**கனடாவில் வேலைவாய்ப்பு**
மற்றும்
**TOURIST விசா**
**தேவைப்படுபவர்கள்**
உடன் தொடர்பு கொள்ளவும்.

- 5-18 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான Student விசாவும் பெற்றுத் தரப்படும்.
- பாதுகாவலர்களுக்கும் 10 வருட விசா பெற்றுத் தரப்படும்.
- மலேசியாவில் உணவகம் ஒன்றில் பணியாற்ற 5 பேர் தேவைப்படுகின்றனர்.

விண்ணப்பிக்க இன்றே அழையுங்கள்.
**Hybrid international hub (pvt)ltd.**
யாழ்ப்பாணம்
((வேம்படி மகளிர் கல்லூரி அருகில்))

(C-7880)

தொடர்புகளுக்கு
**077 815 5920, 076 250 0098, 021 222 1265**



**யா/யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை**
**அகமகிழ்வுடன்**
# பாராட்டி வாழ்த்துகின்றோம்!

செல்வி **சாந்தினி மாணிக்கம்** அவர்கள்
(முன்னாள் அதிபர் - யா/யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை
Trd.Home Economics BEd, (primary) M.Ed, PGDEM, SLPS I




**சேவைக்குறிப்பு**

- ப/கடையாமோட்டை முஸ்லிம் ம.வி ஆசிரியர் (1985.04.16 - 1988.02.02)
- யா/கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சி கலாசாலை (1988.02.03 - 1989.12.31
- ப/கட்டைக்காடு றோ.க.த.ம.வித்தி (1990.01.01 - 1990.12.31)
- யா/குளமங்கால் றோ.க.வித்தி 1991.01.01 - 1994.05.04
- கொ/புனித அன்னம்மாள் பெண்கள் த.ம.வி 1994.05.05 - 2003.05.31
- யா/கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தி 2003.06.01 - 2004.10.05
- யா/தேசிய கல்வியியற் கல்லூரி (இணைக்கப்பட்ட விரிவுரையாளர்) 2004.10.06 - 2006.07.19
- யா/செட்டித்தெரு மெ.மி.த.க.பாடசாலை (அதிபர்) 2006.07.20 - 2016.01.17
- யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை (அதிபர்) 2016.01.18 - 2022.12.27
- ஸ்ரீ சத்தியசாயி பாடசாலை, மானிப்பாய், இலங்கை (அதிபர்) 2023.01.19 - இன்றுவரை

யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையிலே,
மாணவர் சாதனைக்கு வழிகாட்டி
மாண்புடன் தேவைகளை நிறைவேற்றி
திறன் வகுப்பறைகளை உருவாக்கி
என்றும் அமைதியாய் பணியாற்றி
மூவிரு ஆண்டுகள் முதல்வராய்
தந்த சேவையை நன்றியுடன் நினைந்து
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

எமது பாடசாலையில் அளப்பரிய சேவையாற்றி ஓய்வுபெற்ற அதிபர் செல்வி **சாந்தினி மாணிக்கம்** அவர்களின் சேவையைப் பாராட்டி **நாளை வியாழக்கிழமை (14.12.2023) 2.30 மணியளவில்** யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி **விசாலாட்சி மண்டபத்தில்** நடைபெறவுள்ள சேவைநலன் பாராட்டு நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(18809)
**யா/யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலைச் சமூகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு மீண்டும் இருளில் மூழ்கும்

## பொறியியலாளர்கள் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அமுல்படுத்தப் படாவிட்டால் நாடு மீண்டும் இருளில் மூழ்கும் என இலங்கை மின்சார சபையின் தொழில்நுட்ப பொறியியலாளர்கள் மற்றும் அதிகாரிகளின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.**



கடந்த சனிக்கிழமை இரவு நாடளாவிய ரீதியிலும் திடீரென மின் தடை ஏற்பட்டது. மின் விநியோகப் பாதை அமைப்பில் ஏற்பட்ட மின்னல் தாக்கம் காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், மின சார விநியோகப் பாதை முறைமையைப் புனரமைக்க வேண்டுமென பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு முன்னர் பரிந்துரைத்திருந்ததாக இலங்கை மின்சார சபையின் தொழில்நுட்ப பொறியியலாளர்கள் மற்றும் மேற்பார் வையாளர்கள் சங்கத்தின் இணைச் செயலாளர் நந்தன உதய குமார தெரிவித்துள்ளார்.

ஆனால் அந்த பரிந்துரைகள் இதுவரை அமுல்படுத்தப்படவில்லை என்றும் குறித்த பரிந்துரைகள் அமுல் படுத்தப்படா விட்டால் நாடு மீண்டும் இருளில் மூழ்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, எதிர்காலத்தில் மின் கட்டணத்தை குறைப்பது மற்றும் மின்சார கட்ட ணத்தை நிர்ணயிக்கும் புதிய முறை தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தலைமையில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# 1500 தே.எண்ணெய் உற்பத்தி நிலையங்கள் மூடல்

## தெங்கு சார்ந்த உற்பத்தியாளர் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

உள்நாட்டில் உள்ள 1,500 தேங்காய் எண்ணெய் உற்பத்தி நிலையங்கள் மூடப்பட்டுள்ளதாக தெங்கு மற்றும் தெங்கு சார்ந்த உற்பத்தியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெய் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நாட்டின் வருடாந்த தேங்காய் எண்ணெய்க்கான கேள்வி, 2 இலட்சத்து 40 ஆயிரம் மெற்றிக் தொன்னாகும். இந்த நிலையில், ஒரு கோடியே 77 இலட்சம் கிலோ கிராம் அளவில் தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யப்படுகின்றது.

இதற்காக 7891 மில்லியன் ரூபாய் செலவிடப்படுகிறது. இதனால் எமது தொழிற்றுறை பாரியளவில் பாதி

ப்படைந்துள்ளது என குறித்த சங்கம் தெரிவித்துள்ளது. (நி-5-6)

# சடுதியாக அதிகரித்த அரிசி விலை

## நுகர்வோர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரிசி வியாபாரிகள் ஒரு கிலோ சம்பா அரிசியின் விலையை 30 ரூபாவினால் அதிகரித்துள்ளதாக நுகர்வோர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இலங்கையின் பிரதான அரிசி நிறுவனம் ஒன்று கிலோ ஒன்றுக்கு 230 ரூபாவாக இருந்த சம்பா அரிசியின் விலையை 260 ரூபாவாக உயர்த்தியுள்ளதாகவும் ஒரு கிலோ சம்பா அரிசியின் விலையை மற்றுமொரு நிறுவனம் 245 ரூபாவாக அதிகரித்துள்ளதாகவும் நுகர்வோர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த நிறுவனங்களுக்கு இஷ்டம்போல் விலையை உயர்த்த வாய்ப்பு அளிக்கப்பட்டால், பண்டிகைக் காலம் முடிவடைவதற்குள் சம்பா அரிசியின் விலை கிலோ ரூ.300 இற்கு அருகில் இருக்கும் என நுகர்வோர் தெரிவிக்கின்றனர். (நி-5-6)

# உயிரிழப்புகள் அதிகரிப்பு

## புள்ளிவிபரத் திணைக்களம் தகவல்

(கொழும்பு)

நாட்டில் அதிகளவான உயிரிழப்புகள் 2022 ஆம் ஆண்டில் பதிவாகியுள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, 2010 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட புள்ளிவிபரத்தில் 130,337 பதிவாகியிருந்த உயிரிழப்புகள் 2022 ஆம் ஆண்டில் 179,792 ஆக அதிகரித்துள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பி.எம்.பி.அநுரகுமார தெரிவித்துள்ளார்.

அத்துடன் 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையில் 633,303 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளதாகவும் 2016 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையில் மாத்திரம் 852,652 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நாட்டின் உத்தியோகபூர்வ மக்கள் தொகை கணக்கெடுப்பை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் அடுத்த ஆண்டில் முன்னெடுக்கப்படும் என தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் திபிஎம்பி. அநுரகுமார மேலும் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# இந்திய மீனவர்களை விடுவிக்க உடனடியாக நடவடிக்கை எடுங்கள்

## தமிழக முதல்வர் மீண்டும் கோரிக்கை

(சென்னை)

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மீனவர்கள் மற்றும் அவர்களின் படகுகளை உடனடியாக மீட்பதற்குத் தேவையான தூதரக நடவடிக்கைகளை எடுக்குமாறு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கருக்கு நேற்றுமுன்தினம் எழுதியுள்ள கடிதத்திலேயே முதலமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாகப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தைச் சேர்ந்த 12 மீனவர்கள் மற்றும் மயிலாடுதுறை, காரைக்கால் பகுதிகளைச் சேர்ந்த 13 மீனவர்களும் கடந்த 9 ஆம் திகதி இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் மற்றொரு மீன்பிடிப் படகு இலங்கைக் கடற்படையின் ரோந்துக் கப்பலால் சேதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தமிழக முதலமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக் கடற்படையினரின், இந்திய மீனவர்கள் மீதான தாக்குதல்கள் அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றமையானது, தமிழக மீனவர்களின் வாழ்வாதாரம் மற்றும் பாதுகாப்பில் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளதாக அவர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# இரு தினங்களில் மட்டும் 12 பேர் மாயம்

## பொலிஸ் தலைமையகம் தகவல்

(கொழும்பு)

நாட்டில் கடந்த இரு நாட்களில் 4 சிறுவர்கள் உள்ளிட்ட 12 பேர் காணாமல் போயுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, கிளிநொச்சி-தருமபுரம் உட்பட நாட்டின் பல் இடங்களைச் சேர்ந்தவர்களே காணாமல் போயுள்ளனர்.

அதற்கிணங்க, கடந்த இரண்டு தினங்களில் மட்டும் நாட்டில் 12 பேர் காணாமற் போயுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-5-6)

# கோழி இறைச்சியின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் சந்தையில் ஒரு கிலோ கோழி இறைச்சியின் விலையை அதிகரிக்க மொத்த வியாபாரிகள் தீர்மானித்துள்ள தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் ஒரு கிலோ கோழி இறைச்சி 30 முதல் 50 ரூபாவால் அதிகரிக்கப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது. எனவே 1,200 ரூபாய்க்கு விற்கப்பட்ட ஒரு கிலோ கோழி இறைச்சி 1,250 ரூபாய்க்கு உயர் வடையும் என எதிர்பார்க் கப்படுகிறது.

இருப்பினும் பல கோழிப் பண்ணை உரிமையாளர்கள் இந்த தொகையை நேற்று முன் தினம் அதிகரித்துள்ளதாகவும் வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். இதனிடையே முட்டையின் விலையும் 60 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளதுடன் சில இடங்களில் அதற்கு மேலதிகமாக விற்பனை செய்யப்படுகின்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (நி-5-6)

# உணவுக்கு அல்லல்படுபவர்களிடம் வரியை வசூலிக்க வேண்டாம்-எரான்

(கொழும்பு)

உணவின்றி இருப்பவர்களிடம் இருந்து வரியை அறவிடுவதற்குப் பதிலாக வரி செலுத்தக்கூடியவர்களிடம் இருந்து வரியை அறவிட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்துள்ளது.

நேற்று பாராளுமன்றில் உரையாற்றிய அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன, அரச வருவாய் அவசியம் என்றாலும் பணவீக்கச் சுமையை சாதாரண மக்களே எதிர்கொள்வதாக சுட்டிக்காட்டினார்.

எனவே அரச வருமானம் 45 வீதத்தால் அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் அதில் 56 வீதமான வருமானத்தை வற் வரி மூலம் பெற வேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

சட்டமூலம் தொடர்பாக பாராளுமன்றத்தில் விவாதம் அவசியம் என்றபோதும் வற் வரி சட்டமூலம் தொடர்பில் எதிர்க்கட்சிகளுக்கு கருத்து தெரிவிக்க அரசாங்கம் சந்தர்ப்பம் வழங்கவில்லை என்றும் குற்றம் சாட்டியுள்ளார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் - 2024
## கரைச்சிப் பிரதேச சபை - கிளிநொச்சி

2024ம் ஆண்டு சபைக்கு பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் பொருட்டு பதிவு செய்து கொள்வதற்கு விரும்பும் தகைமைவாய்ந்த வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொகுதி (A) | பொருட்கள் |
|---|---|
| A - 01 | காகிதாதி எழுதுபொருள் |
| A - 02 | அலுவலக உபகரணங்கள் (தளபாடம்) |
| A - 03 | சித்த மருத்துவ மருந்துக்கள் |
| A - 04 | நூலக நூல்கள் |
| A - 05 | துணி வகை |
| A - 06 | கட்டட பொருட்கள் |
| A - 07 | கல், மணல் |
| A - 08 | தீந்தை வகை |
| A - 09 | நீர்க்குழாய் |
| A - 10 | வாகன உதிரிப்பாகங்கள் |
| A - 11 | மின் வழங்கு பொருட்கள், மின் பாவனைப் பொருட்கள் |
| A - 12 | எரிபொருட்கள் உராய்வு நீக்கி |
| A - 13 | இரும்பு பொருட்கள் |
| A - 14 | தீராந்திகள், பலகைகள், சட்டங்கள் |
| A - 15 | பனைமரங்கள், சலாகைகள் |
| A - 16 | வாகனங்களுக்கான ரயர், ரியூப் மற்றும் மின்கலம் |
| A - 17 | கணணி, அச்சுப்பொறி, பிரதியாக்கல் இயந்திரம், தொலைநகல், Antivirus, செருகி மற்றும் இவற்றிற்கான உதிரிப்பாகம் |
| A - 18 | சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் கிருமிநாசினிகள் |
| A - 19 | பாதணிகள், தோல் பொருட்கள், மழை அங்கிகள் |
| A - 20 | அலங்காரப் பொருட்கள் |
| A - 21 | இலத்திரனியல் பொருட்கள் |
| A - 22 | மரக்கன்றுகள் (பழங்கள், நிழல்தரும் மரங்கள், பூங்கன்றுகள் முதலியன) |
| A - 23 | சிற்றுண்டி மற்றும் உணவு வகைகள் |
| A - 24 | கழிவகற்றும் கூடைகள் |

| தொகுதி (B) | சேவைகள் |
|---|---|
| B - 01 | அச்சிடுதல், பதாதைகள் அமைத்தல், ஸ்ரிக்கர் அச்சிடுதல், நூல் கடடுதல் |
| B - 02 | மோட்டார் வாகனங்கள், உழவு ,யந்திரங்கள் திருத்தல் |
| B - 03 | வாகனங்களுக்குரிய ரியூப் ஒட்டுதல்,ரயர் மாற்றுதல் |
| B - 04 | ஓட்டு வேலைகள், உலோக வேலைகள் |
| B - 05 | கனரக வாகனங்களின் சேவை, வாடகைக்கு விடுதல் |
| B - 06 | மின்சாரத்திருத்தம் |
| B - 07 | இலத்திரனியல் சாதனத்திருத்தம் |
| B - 08 | வாகனங்கள் சுத்திகரிப்பு |
| B - 09 | கோலவுடை தைத்தல் |
| B - 10 | கணணி, பிரதியாக்கல் இயந்திரம் திருத்தம், சுத்திகரிப்பு |
| B - 11 | இறப்பர் முத்திரை தயாரித்தல் |
| B - 12 | வீதி விளக்குகள் பொருத்துதல் |
| B - 13 | மயானங்களில் இறந்த உடல்களை எரியூட்டுதல் |
| B - 14 | வீதி, கட்டடம் புனரமைப்பு, நிர்மாண வேலைகள் |
| B - 15 | கழிவகற்றல் சேவை (Gully emptier Service) |

| தொகுதி (C) | ஒப்பந்த வேலைகள் |
|---|---|
| C - 01 | குழாய்க்கிணறு அமைத்தல் |
| C - 02 | வீதி நிர்மாணமும் திருத்தமும் |
| C - 03 | கட்டட நிர்மாணமும் திருத்தமும் |

பதிவானது ஒவ்வொரு வழங்கல் சேவைக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்படல் சேண்டும். படிவங்களை சபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் பதிவுக்கட்டணமாக ரூபா 1,000 (வரி நீங்கலாக) அறவிடப்படும்.

விண்ணப்பத்தின் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் 2024"** எனக்குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் **"செயலாளர், தலைமை அலுவலகம், கரைச்சி பிரதேசசபை, கிளிநொச்சி.** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் 2023.12.29வரை ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விபரங்களுக்கு 021-228-5761 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

**செயலாளர்,**
**கரைச்சி பிரதேசசபை,**
**கிளிநொச்சி.**

(C-7884)

# துடுப்பாட்ட போட்டி
# மகாஜன வெற்றி



19 வயதுப் பிரிவினருக்கான துடுப்பாட்ட போட்டியில் மகாஜனக் கல்லூரி 268 ஓட்டங்களினால் வெற்றி பெற்றது.

இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தால் நடத்தப்பட்ட 19 வயதுப் பிரிவினருக்கான மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்களைக் கொண்ட துடுப்பாட்டப் போட்டி கடந்த வியாழக்கிழமை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் மகாஜனவை எதிர்த்து சாவகச்சேரி இந்துக் கல்லூரி மோதியது.

டாஸ் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி 50 ஓவர் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 345 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

அவ் அணிசார்பாக எஸ். அபர்ணன் 86 பந்தில் 9 நான்கு ஓட்டங்கள், 15 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 142, யோவேல் றொஷான் 41, எஸ். சுபிஷ்கரன், எஸ்.ரகசியன் 30 மற்றும் ரி.அபிஷாந் 27 ஓட்டங்களை பெற்றுக் கொண்டனர்.



பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சாவகச்சேரி இந்துக் கல்லூரி 19.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 77 ஓட்டங்களை மாத்திரமே எடுத்து 268 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

பந்துவீச்சில் யோவேல் றொஷான் 5, கௌதமன் 2 மற்றும் துளசிகன் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர். (நி-5-6)

# மரண அறிவித்தல்



## திருமதி அமிர்தமலர் சுந்தரலிங்கம்
### (முன்னாள் விவாகப்பதிவாளர்)

கொடிகாமம் பருத்தித்துறை வீதியை சேர்ந்த முன்னாள் விவாகப் பதிவாளர் அமிர்தமலர் சுந்தரலிங்கம் இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் அமரர் சுந்தரலிங்கத்தின் ஆருயிர் மனைவியும் காலஞ்சென்ற திசைவீரசிங்கம் - செல்லம்மா இணையர்களின் மூத்த மகளும், அமரர்கள் சின்னத்தம்பி - இராசம்மா தம்பதிகளின் மூத்த மருமகளும், அமரர்கள் யோகேஸ்வரன்,கெங்காதரன், மற்றும் திருமதி மூர்த்தி செல்வமலர், திருச்செல்வம், திருமதி அரியமலர் குமாரசாமி ஆகியோரின் மூத்த சகோதரியும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம், செல்லம்மா, நடராஜா மற்றும் யோகலிங்கம், அமிர்தலிங்கம் ஆகியோரினதும் மைத்துனியும், சுந்தரேஸ்வரி, கமலசுந்தரி,அமிர்தாஈஸ்வரன் ஆகியோரின் அன்புத்தாயாரும் சிவதாஸ், ரத்தி ஆகியோரின் அன்பு மாமியாரும்,அபிராமி ஆனந்த், ஜனனி முத்து, அபிராஜ், அஜித், அனிசா, அம்சினி ஆகியோரின் அன்பு அம்மம்மாவும் அவினேஷ், சக்திதரன், ஆதேஷ் ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் காலை 9.00 மணி முதல் 11.00 மணி வரை நடைபெற்று பின்னர் வேவிள் மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

***தொடர்பு :***
**திரு.நந்தி : +49 176 71213744**
**திருமதி தேவி சிவதாஸ் : +94701044748**
**திரு.வசந்தமனோகரன் : +94777582435**

(C-7886)

***தகவல் :***
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை மானிப்பாய் கிராம உபஅலுவலகம் விண்ணப்பதாரரின் பெயர் சிவவண்ணன் பெண் டிலக்சி முகவரி ஆதன இல 21/3 வீதி கலையரசு வீதி வட்டாரம் 11.

வட்டாரம் 11 கலையரசு வீதி ஆதன இலக்கம் 21/3 இல் அமைந்துள்ள, உறுதியின் பிரகாரம் வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் தென்மேற்கு பகுதி மானிப்பாய் கோவிற்பற்று நவாலி இறை "மண்டிலிவத்தை" எனும் பெயருள்ள நிலப்பரப்பு 2 குளி 6 1/8 விஸ்தீரணமுள்ள இவ்ஆதனம் நவாலி தெற்கு மானிப்பாய் ஐச் சேர்ந்த தர்மலிங்கம் யோகசித்தனும் பெண் சாந்தினி ஆகியவர்களால் "இவ்ஆதனத்தின் உரிமையாளர்கள் தாமே" என பிரசித்த நொத்தாரிசு இ.வசந்தசேனன் அவர்களால் எழுதப்பட்ட 11364ஆம் இலக்க 16.01.2017ஆம் திகதிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் வெளிப்படுத்தியுள்ளார்கள். மேலும் இவ்ஆதனம் பிரசித்த நொத்தாரிசு இ.வசந்தசேனன் அவர்களால் எழுதப்பட்ட 11365ஆம் இலக்க 2017.01.16ஆம் திகதிய உறுதி மூலம் இராசையா சிவநேசனும் பெண் பரமேஸ்வரி என்பவருக்கு அறுதியாக வழங்கியுள்ளார். இவ்ஆதனத்தினை தர்மசுகி காசிநாதன் பிரசித்த நொத்தாரிசு அவர்களால் எழுதப்பட்ட 260ஆம் இலக்க 2022.10.24ஆம் திகதிய உறுதி மூலம் சிவவண்ணன் பெண் டிலக்சி என்பவருக்கு சீதனமாக வழங்கியுள்ளார்.

**ஆதன விபரம்**

நிலஅளவையாளர் ஜெ.நாகேஸ்வரன் அவர்களால் வரையப்பட்ட 0210ஆம் இலக்க 2021.08.07ஆம் திகதிய நிலஅளவைப்படத்தின் பிரகாரம் 4 நிலப்பரப்பு 12.79 குளி கொண்ட இவ்ஆதனத்தின் எல்லைகள் பின்வருமாறு.

வடக்கு :- சிவனேசன் பெண் தர்மேஸ்வரி.
கிழக்கு:- பரராசசேகரம் பெண் தங்கேஸ்வரி மற்றும் சண்முகராசா பெண் குணரஞ்சினி.
தெற்கு:- இரத்தினம் ரஞ்சித்குமார், கனேசலிங்கம் பெண் ஜெயந்தினி மற்றும் ரத்தினம் ஜெயக்குமார்.
மேற்கு: வீதி.

மேற்குறித்த ஆதனத்தை சிவவண்ணன் பெண் டிலக்சி என்ற பெயரில் ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,**
**மானிப்பாய்.**

(18208)

# ST. JOHN'S COLLEGE, JAFFNA

we are looking for professionally qualified, committed and motivated candidates to fill the following vacancies,

## ACCOUNTANT

**Requirements:**
**Qualifications:**

- Should possess a full / part qualification from a recognized Accounting body (Degree / CIMA / ACCA/ICA).
- Hands-on experience with QuickBooks accounting software,
- Knowledge in the preparation of financial statements, Auditing procedures, VAT returns and monthly financial reports and project cost reports is must,
- Strong attention to detail and good analytical skills,
- Good command of English,
- Age between 30-55 years.

**Role:**

- Head of Accounts Department,
- Advises and provides assistance to principal on all finance, audit and compliance issues.
- Responsible for Monthly Reporting of Cash Management and the financial statements & its accuracy and completion before deadlines,
- Prepares annual budgets in liaison with other functional heads and principal,
- Expected to carryout Feasibility Studies on various projects and tenders as and when required and advise principal.

## HUMAN RESOURCE MANAGER

**Requirements:**
**Qualifications:**

- The ideal candidate should hold a Bachelor's Degree in Human Resources Management or Business Management and / or have a professional qualification in HRM from a reputed educational institute.
- The individual should have atleast 2 years' experience in HR and Administration.

**Role:**

**The person shall be responsible for**

- Implementing HR policies,
- General administration functions at the location while executing HR strategies in the areas of employee engagement, employee welfare, talent attraction and HR analytics.

The Successful candidate would be provided with a competitive remuneration package on par with the qualification and experience.

Please forward your CV with the details of two non-related referees on or before 22nd December 2023 to stjohns@sitnet.lk mentioning the post applied for on the subject line or send it by registered post to the below given address indicating the post applied for on the top left hand corner of the envelope.

**Only shortlisted candidates would be called for an interview.**

Principal, St. John's College,
Main Street, Jaffna.

(C-7878)

# இராசிபலன்

13.12.2023
கார்த்திகை 27,புதன்கிழமை
பிரதமை பின்னிரவு 4.38 மணிவரை

கேட்டை பி. ப 12.16 மணி வரை
சுபநேரம் -4.50-6.20 மணிவரை
இராகுகாலம்-12.20-1.50 மணிவரை

சந்திராஷ்டமம்-
கார்த்திகை, ரோகினி.

வளவன்

**மேஷம்**
அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வீட்டை அழகாக வைத்திருக்க முற்படுவீர்கள்.

**ரிஷபம்**
உடல்நலம் பற்றிய கவலை உருவாகி மறையும், பயணங்களால் அலைச்சல்களும் சோர்வுகளும் ஏற்படலாம், குடும்பத்தர் நண்பர்களிடையே சிறுசிறு மனஸ்தாபங்கள் ஏற்படலாம்.

**மிதுனம்**
வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாய் இருப்பீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வார்கள்.

**கடகம்**
பகையொன்று நட்பாகலாம், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**சிம்மம்**
பூர்வ புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள்

**கன்னி**
கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், கடன்சுமை குறையும் நாள், புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள்.

**துலாம்**
நீண்டநாளைய விருப்பம் ஒன்று நிறைவேறும் வாய்ப்பண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**விருச்சிகம்**
தொழில் வளர்ச்சி கூடும் நாள், பொருளாதார நிலை உயர வழி வகை செய்வீர்கள், நண்பர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**தனுசு**
திடீர் பயணங்களால் வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம், உடல்நலனில் அக்கறை தேவை, எதிர்பாராத காரியமொன்று நடைபெற்று மகிழ்ச்சி தரும்.

**மகரம்**
திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், குடும்ப பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம்.

**கும்பம்**
குடும்ப மகிழ்ச்சி மேலோங்கும் நாள், எடுத்த காரியங்களை எளிதில் செய்து முடிப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மீனம்**
செய்தொழில் மேன்மையுண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, மற்றவர்கள் மத்தியில் உங்கள் மதிப்பும் மரியாதையும் உயரும்.

**பிறரிடம் எதுவும் கேட்காதவன் பெரும் பணக்காரன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வலம்புரி**
விளம்பரத்
தொடர்புகளுக்கு
**076 636 3378,**
**076 097 3127**

## க.பொ.த.சா/த(2022) பரீட்சை பெறுபேறுகள்

**யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி**

த.விதுசன்-9ஏ, த.மாதுளன்-9ஏ, ந.சுவர்ணிகா-9ஏ, நா.பவநுதன்-8ஏபி, சி.தேன்மொழி-8ஏசி, வ.அபினாஸ்-8ஏசி, செ.பிந்துஜன்-7ஏ2பி, மா.மேனுசன்-7ஏ2பி, சு.சாணுஜா-7ஏபிசி, மா.சரண்ஜா-6ஏ3பி, கு.அகசனா- 6ஏ2பிசி, சி.கார்த்திகா - 6ஏபி2சி.

## கேள்வி அறிவித்தல்
## சபை நிதி வேலைத்திட்டங்கள் - 2023
## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை

1. பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் சபை நிதியின் ஒரு பகுதி குறித்த வேலைத்திட்டத்திற்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2. **தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை** சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.

3. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

4. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் விலைக்கேள்வியாளர் கறுப்புப் பட்டியலில் **(Black List)** சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி மற்றும் கட்டுமான அமைப்புக்கான சிடா **(CIDA)** பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

5. தேவையான தகைமைகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 04 **(Section IV)** இலும் மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை **(Schedule)** இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை (தொலைபேசி 021-205-0037 , தொலைநகல் 021-205-0036, E-Mail:** pallaips@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் காலை **09.00** மணி முதல் **15.00** மணி வரை **13.12.2023** ஆம் திகதியிலிருந்து **25.12.2023** ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

7. ஆர்வமுள்ள கேள்விதாரர் **பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை** எனும் இடத்திலிருந்து **13.12.2023**.ஆம் திகதியிலிருந்து **25.12.2023** ஆம் திகதிவரை அலுவலக நாட்களில் மட்டும் காலை **09.00** மணிக்கும் **15.00** மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.**2,000/-** (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

8. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை** எனும் முகவரிக்கு **27.12.2023** ஆம் திகதி மாலை **14.00** மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

9. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி அடையாள இலக்கம் | வேலை விபரம் | நிதி மூலம் | மதிப்பீட்டுத் தொகை VAT நீங்கலாக (Rs Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை: பிணைவைப்பு (Rs) | வேண்டப்படும் கேள்விப் பிணை: செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| NP/14/45(3)/PL /CF/24/2023 | Renovation & Improvement Works for head office, Sub Office-Pulopallai, Suboffice-Mullipattu, Library-Pulopalai, Vegitable & Fish market in pachchilaipalli Pradeshiya Sabha | Council | 2.48 Mn | 84 நாட்கள் | C9, C8 and C7 | 25,000.00 | 27.03.2024 |
| NP/14/45(3)/PL /CF/17/2023 | Fencing work for cemeteries at mullipattu - Pallai | Council | 2.17 Mn | 84 நாட்கள் | C9,C8 and C7 | 22,000.00 | 27.03.2024 |

10. கேள்வி கோரல் பற்றிய முன் கூட்டிய கூட்டம் **18.12.2023 ஆம்** திகதி காலை **10.30** மணிக்கு **பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை** அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்துகொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

11. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழு தலைவருக்கு அதிகாரம் உண்டு.

**தயானந்தன் தர்சினி,**
**தலைவர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,**
**பளை.**

(சி-7881)

## புலமைப்பரிசில் பரீட்சை- 2023 சித்தியடைந்தோர் விபரம்

**யா/சங்கானை கிழக்கு விக்னேஸ்வரா வித்தியாசாலை**

து.மோசியா - 155, ப.கம்சனா -145

**யா/ அச்சுவேலி ஆரம்பப் பாடசாலை**

ஜெ.சதுசியன்-168, வி.ஹரிஷ்வின்-167, ற.யதிஸ்னா - 163, ஜெ.ஜெனிலியா-163, வி.டிஷானா -162, வா.தாரிகா-160, அ.சார்மி -155 , ச.டிஷானா-152 ,சு.ஹரிசித்-151, து. லுக்ஷானி- 149, ஸ்ரீ.அபிஷாந் -149

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தினால் நடத்தப்படும் விஞ்ஞான சிறப்புமாணி 2023/2024 கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எதிர்வரும் 16.01.2024 இற்கு முன்னர் இணையவழி ஊடாக (www.ou.ac.lk) விண்ணப்பிக்கலாம் எனவும் மேலதிக தகவல்களைப் பெற விரும்புபவர்கள் யாழ்ப்பாண பிராந்திய நிலையத்துடன் 021 222 3374 எனும் தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளுமாறு யாழ்.பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (நி-5-6)

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தினால் நடத்தப்படும் பட்டமேற்கல்வி டிப்ளோமா -2024 கற்கை நெறிக்கான விண்ணப்ப முடிவுத்திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் நாளை 14.12.2023 இற்கு முன்னர் இணையவழி ஊடாக (www.ou.ac.lk) விண்ணப்பிக்கலாம் எனவும் மேலதிக தகவல்களைப் பெற விரும்புபவர்கள் யாழ்ப்பாண பிராந்திய நிலையத்துடன் 021 222 3374 எனும் தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளுமாறு யாழ்.பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (நி-5-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 400 | 450 | 450 |
| உருளைக்கிழங்கு | 300 | 220 | 220 | 240 |
| பச்சைமிளகாய் | 1200 | 1200 | 1300 | 1000 |
| தக்காளி | 750 | 700 | 700 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 100 | 150 |
| கோவா | 400 | 400 | 380 | 500 |
| கரட் | 400 | 440 | 450 | 500 |
| பூசணி | 180 | 120 | 150 | 140 |
| புடோல் | 300 | 300 | 240 | 300 |
| வாழைக்காய் | 200 | 200 | 200 | 250 |
| சின்ன வெங்காயம் | 400 | 380 | 450 | 400 |
| பெரிய வெங்காயம் | 350 | 340 | 400 | 500 |
| பாகற்காய் | 800 | 500 | 400 | 800 |
| வெண்டக்காய் | 250 | 240 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 100 | 200 |
| பயற்றங்காய் | 400 | 400 | 350 | 300 |
| லீக்ஸ் | 350 | 380 | 350 | 400 |
| பீற்றூட் | 300 | 600 | .500 | 600 |
| கறிமிளகாய் | 600 | 700 | 600 | 700 |
| முருங்கைக்காய் | 1200 | 1600 | — | — |
| போஞ்சி | 350 | 400 | 400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 300 | 350 | 500 | 400 |
| கீரை - 1 பிடி | 150 | 140 | 150 | 200 |
| தேசிக்காய் | 800 | 600 | 500 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 100 | 70-100 |
| இராசவள்ளி | 450 | 600 | 600 | 450 |
| வெங்காயப்பூ | — | — | — | — |
| முள்ளங்கி | 200 | 200 | — | 400 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 100 | 35 | 50 | 60 |
| ஈரப்பலா | 200 | 200 | 150 | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் சூரிய மின்சக்தி திட்டத்தை நிறுவ அமைச்சரவை அனுமதி-பந்துல

(கொழும்பு)


கிளிநொச்சி - பூநகரி குளத்தின் மேற்பரப்பில் சூரிய மின்சக்தி திட்டத்தை நிறுவுவதற்காக அவுஸ்திரேலியாவுடன் மின் கொள்முதல் ஒப்பந்தத்தை எட்டுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பூநகரி குளத்திலிருந்து புதிய கிளிநொச்சி உப மின் நிலையம் வரை தேவையான மின்கடத்திக் கட்டமைப்பை நிர்மாணித்தல் உள்ளிட்ட 100 வீத மின்கல வலுசக்தி காப்புக் கட்டமைப்புடனான 700 மெகாவோட் சூரிய மின்சக்தி மின்னுற்பத்தி நிலையத்தை அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கமைவாக யுனைற்றட் சோலர் எனர்ஜி கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவை கொள்கை ரீதியில் ஏற்றுக்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.



அதேநேரம் கருத்திட்ட முன்மொழிவு மதிப்பீடு மற்றும் வலுசக்தியை கொள்வனவு செய்யும் கட்டணத்தை தீர்மானிப்பதற்காக அமைச்சரவைக்கு பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தை உடன்பாட்டு குழுவை நியமிப்பதற்கும் அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

அதற்கமைய, பேச்சுவார்த்தை உடன்பாட்டு குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் யுனைற்றட் சோலர் எனர்ஜி கம்பனியுடன் உத்தேச கருத்திட்டத்தை அமுல்படுத்துதல் மற்றும் அதற்குரிய மின்சாரத்தை கொள்வனவு செய்யும் உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்காக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவு அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

# மகாவலி அதிகார சபையின் பிரதிபலிப்பே வனவளத்திணைக்களம்

## சிறீதரன் எம்.பி

(கொழும்பு)



மகாவலி அதிகாரசபையினூடாக தமிழர்களின் நிலம் எவ்வாறு பறிக்கப்பட்டதோ அதே செயற்பாட்டை வனவளத்திணைக்களம் மீண்டும் முன்னெடுத்து வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற பாராளுமன்ற உரையின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், மிக நூதனமான முறையில் நுட்பமாக தமிழ் மக்களினுடைய காணிகளை பறிப்பதற்கு மகாவலி அதிகாரசபையை பயன்படுத்தினார்களோ அதே போல வேலணை, காரைநகர், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருக்கிற காணிகளை பறிப்பதற்கு மிக நுட்பமான காரியங்களை வனவளத் திணைக்களம் முன்னெடுத்து வருகின்றது என தெரிவித்தார். (நி-5-6)

# நெற்செய்கையாளர்களுக்கு இலவச ஜப்பான் யூரியா உரம்

(சாவகச்சேரி)

30பரப்பிற்கு உட்பட்ட நெற்செய்கையாளர்களுக்கு கமநல சேவை நிலையங்களுடாக இலவச ஜப்பான் யூரியா உரம் வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் இன்று புதன்கிழமை கோவிலாக் கண்டி,கைதடி நாவற்குழி, கைதடி நுணாவில் கமக்கார அமைப்புக்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கும், நாளை மறவன்புலோ மற்றும் தனங்கிளப்பு கமக்கார அமைப்புக்களைச் சேர்ந்த சிறு விவசாயிகளுக்கும் நாளை மறுதினம் தென் மட்டுவில்,மட்டுவில் நுணாவில், மட்டுவில் மத்தி மற்றும் சந்திரபுரம் கமக்கார அமைப்புக்களைச் சேர்ந்தவர்களுக்கும் இலவச யூரியா உரம் வழங்கப்படவுள்ளதால் விவசாயிகள் காலை 9மணி தொடக்கம் மாலை 3மணி வரை ஏக்கர் வரி மற்றும் அடையாள அட்டையுடன் கைதடி கமநல சேவை நிலையத்திற்குச் சென்று தமக்கான இலவச உரத்தை பெற்றுக் கொள்ள முடியும் என கமநல சேவை நிலைய பெரும்போக உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (நி-5-6-30)

# இலங்கையில் வலுவான நிலநடுக்கங்களுக்கு சாத்தியமில்லை

## புவியியலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் வலுவான நிலநடுக்கங்கள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் மிகக் குறைவு என புவியியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் தகவல் அதிகாரி புவியியலாளர் நில்மினி தல்பே தெரிவித்துள்ளார்.

ரிக்டர் அளவுகோலில் 5 இற்கும் குறைவான சிறிய நிலநடுக்கங்களே நாட்டில் ஏற்படுகின்றன எனவும் அவர் தெரிவித்தார். (நி-5-6)

# கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது) கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவுகள் ஏற்பாடுகள்) சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும். 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தாலும் 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தாலும் திருத்தம் செய்யப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகக் கடமையாற்றும் திரு.கிறகோரி சந்திரசேகரன் ஆகிய எனக்கு கையளிக்கப்பட்டு 2021.07.01ஆம் திகதிய **2234/39**ஆம் இலக்கமுடைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட அரச வர்த்தமானி மூலமாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களிற்கு அமைவாக மேற்படி சங்கத்தின் 11 கிளைகளுக்குமான கிளைக்குழு தெரிவிற்கான கிளைப் பொதுச்சபை கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறுவதற்காக இக்கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களைப் பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

- அதற்கு அமைய இக்கூட்டங்களிற்கு சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்குத் தனித்தனி அறிவித்தல் சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
- கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்க தகுதியுள்ள உறுப்பினர்களில் நான்கிலொரு (1/4) பங்கினர் அல்லது 25 பேர் அதில் எது குறைவோ அத்தொகையாகும்.
- தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையில் இருந்து கிளைக்குழுவிற்கான ஒன்பது (09) உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச்சபையைக் கோருவார். இதில் இருவராவது 18-35 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- சபையில் இருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் 09 பேருக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவு மேற்கொள்ளுவார். இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிற்கும் மேற்பட்ட வேட்பாளருக்கிடையே சமவாக்குகள் கிடைக்கப் பெறும் பட்சத்தில் திருவுளச் சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.
- தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களைத் தவிசாளர் கிளையின் பொதுச்சபையிற் பிரகடனப்படுத்துவதுடன் சங்க செயலாளருக்கும் ஆணையாளருக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.

**கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரங்கள்.**
**கிளைப் பொதுக்கூட்டங்கள் நடைபெறும் திகதியும் காலமும் 2023.12.16 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணி**

| தொடர் இல | கிளை இல | கிளையின் பெயர் | கூட்டம் நடைபெறும் இடங்கள் | தவிசாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 28 | கோண்டாவில் | ஞானவீர முன்பள்ளி நிலையம், கோண்டாவில். | திரு.ஜெயபாலன் சதீஸ். |
| 2 | 29 | காரைக்கால் | அமரகவி முன்பள்ளி நிலையம்,பாரதி வீதி. கோண்டாவில். | திரு.சண்முகம் சசீந்திரன். |
| 3 | 30 | கொக்குவில் | சிறி காளியம்பாள் சனசமூகநிலையம், தாவடி தெற்கு. | திரு.ஜோசப் ஜெகதாஸ். |
| 4 | 31 | வராகி | வராகி அம்மன் சனசமூகநிலையம், கொக்குவில் மேற்கு. | திரு.பரசிவன் தவப்பிரியன் |
| 5 | 32 | கலட்டி | அண்ணா முன்பள்ளி நிலையம், இணுவில் மேற்கு. | திரு.தங்கராசா கண்ணதாசன். |
| 6 | 33 | இணுவில் | கலாஜோதி முன்பள்ளி நிலையம், இணுவில் கிழக்கு. | திரு.நாகலிங்கும் குமணதாசன். |
| 7 | 34 | தாவடி | சிறி காளியம்பாள் முன்பள்ளி நிலையம், தாவடி தெற்கு. | திரு.சபாரத்தினம் அருள்நாதன். |
| 8 | 35 | ஈஞ்சடி | சிறி புவுனேஸ்வரி முன்பள்ளி நிலையம், சுதுமலை கிழக்கு. | திரு.இராஜசிவம் தனுசன். |
| 9 | 36 | ஆலடி | சிறி அம்பாள் முன்பள்ளி நிலையம், சங்குவேலி தெற்கு. | திரு.மகேசன் நிசாந்தன். |
| 10 | 37 | மல்வம் | ஞானப்பிரகாசர் முன்பள்ளி நிலையம், மல்வம், உடுவில். | திரு.இராசரத்தினம் வேல்குமார். |
| 11 | 38 | கோண்டாவில் வடக்கு | சிறி வாகீஸ்வரி முன்பள்ளி நிலையம், கோண்டாவில் வடக்கு. | திரு.பாலச்சந்திரன் பாலரவி. |

**கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்**
**அலுவலகம்,**
**இல.857, கே.கே.எஸ் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**திரு.கி.சந்திரசேகரன்,**
**கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,**
**யாழ்ப்பாணம்.**

(C-7879)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# கனடாவில் புதிய கின்னஸ் சாதனை



(ஒட்டாவா)

கனடாவைச் சேர்ந்த ராபர்ட முரே என்பவர் தனது இரண்டு கைகளையும் பயன்படுத்தாமல் 130 கி.மீ தூரம் வரை சைக்கிள் ஓட்டி புதிய கின்னஸ் சாதனையைப் படைத்துள்ளார்.

இவர் சிறுவயதில் இருந்தே சைக்கிள் ஓட்டுவதில் பெரும் ஆர்வம் கொண்டவர்.

குறித்த நபர் இரு கைகளையும் பயன்படுத்தாமல் சைக்கிள் ஓட்டும் கலையை பல ஆண்டுகளாக முயற்சி செய்து வந்துள்ளார்.

இந்த வியப்புமிகு சாதனையை 5 மணி நேரம் 37 நிமிடங்களில் நிறைவு செய்துள்ளார்.

ராபர்ட் முரே தன்னுடைய 15 வயதில் வாங்கிய முதல் சைக்கிளில் தான் இந்த கின்னஸ் சாதனையையும் நிகழ்த்தியிருக்கிறார்.

இந்தச் சாதனையை நிகழ்த்துவதற்காக பல மாதங்கள் இடைவிடாத பயிற்சியையும் மேற்கொண்டுள்ளார்.

இந்த சிறப்பான சாதனை பயணத்தின் போது சுமார் 122 கி.மீ தூரம் வரை எந்தவித பிரச்சினையும் இல்லாமல் சிறப்பாக சென்று கொண்டிருந்த போது அவருக்குக் களைப்பு அதிகமானது. இருந்தும் மனம் தளராமல் சைக்கிளை ஓட்டி அவர் சாதித்துக் காட்டியுள்ளார்.

மேலும் இதை வெறும் தனிப்பட்ட சாதனைக்காக மட்டும் செய்யாமல் அல்சைமர் நோய்க்கு நிதி திரட்டும் முயற்சிக்காக ராபர்ட் செய்துள்ளதை பலரும் பாராட்டி வருகின்றனர். (நி-5-6)

# கதிரியக்க கழிவு
# கரையொதுங்

## மீன்களை சாப்பிட வேண்டாம் என ஜ

(டோக்கியோ)

**ஜப்பானின் ஹகோடேட் தீவில் புகுஷிமா நிலையத்தின் கதிரியக்கக் கழிவுகள் கடலுடன் மீன்கள் உயிரிழந்த நிலையில் கரை ஒதுங்கியுள்ள**



# நேருக்குநேர் மோதிய ரயில்கள் 17 பேர் படுகாயம்-இத்தாலியில் துயரம்

(உரோம்)

இத்தாலியில் இரண்டு ரயில்கள் நேருக்குநேர் மோதியதால் ஏற்பட்ட விபத்தில் 17 பேர் படுகாயமடைந்ததாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இத்தாலியின் போலோக்னா நகரில் இருந்து ரிமினி என்ற இடத்துக்கு ரயில் ஒன்று புறப்பட்டு சென்ற போது அங்குள்ள பென்சா-போர்லி பகுதிகளுக்கு இடையே அதே தண்டவாளத்தில் மற்றொரு ரயிலும் வந்து கொண்டிருந்தது.

இதை அறிந்த ரயில் இயக்குநர்கள் உடனடியாக ரயிலை நிறுத்த முயன்ற போதிலும் இரு ரயில்களும் நேருக்குநேர் மோதி விபத்து ஏற்பட்டது.




இதனால் சில ரயில் பெட்டிகள் தண்டவாளத்தில் இருந்து தடம்புரண்டதால் பயணிகள் பலர் காயம் அடைந்தனர். இதனையடுத்து மீட்புக் குழுவினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர்.

அப்போது ரயிலுக்குள் சிக்கி படுகாயம் அடைந்த 17 பேர் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்ட நிலையில் அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த ரயில் விபத்து குறித்து ரயில் திணைக்கள அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்ற நிலையில் முதல்கட்ட விசாரணையில் சமிக்ஞை கோளாறு காரணமாக இந்த விபத்து ஏற்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது. (நி-5-6)

# ஹமாஸின் கோரிக்கைகளை
# பணயக் கைதிகள் உயிருடன்

## ஹமாஸ் எச்சரிக்கை



(காசா)

தெற்கு காசாவின் முக்கிய நகரத்தை இஸ்ரேல் குண்டுவீசித் தாக்கியிருக்கும் நிலையில், எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றாதவரை எந்தவொரு பணயக்கைதிகளும் உயிருடன் வெளியேற மாட்டார்கள் என ஹமாஸ் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இஸ்ரேல் மீது கடந்த 7 ஆம் திகதி ஹமாஸ் அமைப்பினர் திடீர் தாக்குதல் நடத்தியதையடுத்து இஸ்ரேல் பாதுகாப்பு படை காசா நகர் மீது தாக்குதல் நடத்தி வருகின்றது.

இந்த நிலையில், கடந்த மாதம் தற்காலிக போர் நிறுத்தத்தின் போது 80 இஸ்ரேல் பணயக்கைதிகளுக்கு இணையாக 240 பாலஸ்தீனக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

எனினும் தெற்கு காசாவின் முக்கிய நகரத்தை இஸ்ரேல் குண்டுவீசித் தாக்கியிருக்கின்ற சூழ்நிலையில் தற்போது இஸ்ரேல் படையினர் நடத்தி வரும் கொடூரத் தாக்குதலுக்கு ஹமாஸ் அமைப்பினரும் பதிலடி கொடுத்து வருகின்றனர்.

இதேவேளை ஹமாஸிடம் இன்னும் பலர் பணயக்கைதிகளாக உள்ள நிலையில் அவர்களை மீட்க இஸ்ரேல் படையினர் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இந் நிலையில் எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றாத வரை எந்தவொரு பணயக்கைதிகளும் உயிருடன் வெளியேற மாட்டார்கள் என ஹமாஸின் ஆயுதப்பிரிவின் செய்தி தொடர்பாளர் அபு ஒபையா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ...ிவுகள் கலந்ததால் ...ுங்கும் மீன்கள்

## ...ன ஜப்பான் அரசாங்கம் எச்சரிக்கை


### ...ஷிமா அணுமின் ...லுடன் கலந்ததால் ...ியுள்ளன.

ஜப்பானுக்குச் சொந்தமான ...ஹகோடேட் தீவு பிரபல சுற்றுலாத் தலமாக விளங்குகிறது.

இங்கு திடீரென ஏராளமான மீன்கள் செத்து கரை ஒதுங்கின. இதனையறிந்த மக்கள் அந்த மீன்களை சேகரித்து விற்பனை செய்யத் தொடங்கினர்.


ஆனால் நேரம் செல்லச்செல்ல லட்சக்கணக்கான மீன்கள் செத்து மிதந்துள்ளன.

புகுஷிமா அணுமின் நிலையத்தின் கதிரியக்க கழிவுகள் கலந்ததால் மீன்கள் இறந்ததாகக் கூறப்பட்டது. இதனால் அந்த மீன்களைச் சாப்பிட வேண்டாம் என அரசாங்கம் எச்சரிக்கை விடுத்தது.



இதற்கிடையே மீன்கள் இறந்தது குறித்து விசாரணை நடத்துவதற்காக அங்கு ஆராய்ச்சியாளர்கள் அனுப்பப்பட்டு அங்கிருந்து மாதிரிகளை சேகரித்து சென்றுள்ளனர். (நி-5-6)

# இஸ்ரேல் சென்ற கப்பல் மீது ஹவுதி அமைப்பினர் தாக்குதல்



(சனா)

செங்கடலில் பாப் அல்-மண்டப் ஜலசந்திக்கு வடக்கே சுமார் 60 கடல் மைல் தொலைவில் வணிக கப்பல் மீது ஹவுதி அமைப்பினர் ஏவுகணைத் தாக்குதல் நடத்தி உள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இஸ்ரேல்- ஹமாஸ் அமைப்பு இடையேயான போரில் ஏமனில் செயற்படும் ஹவுதி அமைப்பினர் ஹமாஸ்க்கு ஆதரவாக உள்ளனர்.

இதற்கிடையே செங்கடல் பகுதியில் இஸ்ரேல் நோக்கிச் செல்லும் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்துவோம் என்று ஹவுதி அமைப்பினர் தெரிவித்தனர்.

இந்த நிலையில் செங்கடலில் பாப் அல்-மண்டப் ஜலசந்திக்கு வடக்கே சுமார் 60 கடல் மைல் தொலைவில் வணிக கப்பல் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஏமனில் இருந்து ஏவப்பட்ட ஏவுகணை, கப்பல் மீது தாக்கியதில் தீப்பிடித்தது என்றும் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை என்றும் அமெரிக்கப் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதலையடுத்து செங்கடல் பகுதியில் இருந்து அமெரிக்கப் போர் கப்பலான யு.எஸ்.எஸ். மேசன் அங்கு சென்று உதவியதாகத் தெரிவித்தனர்.


அதேவேளை ஏற்கனவே பிரான்ஸ் நாட்டு கப்பல் மீது டிரோன்கள் மூலம் தாக்குதல் நடத்த ஹவுதி அமைப்பினர் முயற்சித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# ...களை நிறைவேற்றாத வரை ...டன் வெளியேற மாட்டார்கள்

...லை

...ின் ...ரல் ...ன்ற ...ரேல் ...ிரத் ...ப்பி ...கின்

...இன் ...ாக ...ளை ...விர ...னர். ...ரிக் ...ரை ...ளும் ...டார் ...பிரி ...அபு ...துள்



இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றாத வரை எந்தவொரு பணயக்கைதிகளும் உயிருடன் வெளியேற மாட்டார்கள். அத்தோடு, எதிரிகள் எங்களுடைய எதிர்க்கும் தன்மையை உடைப்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளனர்.

ஆனால் நாங்கள் எங்கள் மண்ணில் புனிதமான முறையில் போராடுகிறோம்" என தெரிவித்தார்.

இதற்கிடையே காசாவில் புதிய போர் நிறுத்தத்தைக் கொண்டு வரவும் பணயக் கைதிகளை விடுவிப்பதற்கான முயற்சியிலும் கட்டார் நாடு ஈடுபட்டு வருகின்றதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி-5-6)

# பாலஸ்தீனர்களை கூட்டாக தண்டிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது-ரஷ்ய அமைச்சர்

(மொஸ்கோ)


காசாவில் உள்ள பாலஸ்தீனர்களை கூட்டாக தண்டிக்கும் செயலை நியாயப்படுத்துவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது என ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் செர்கே லாவ்ரவ் தெரிவித்துள்ளார்.

கட்டார் நாட்டில் நடைபெற்ற 2 நாள் சர்வதேச கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேற்படி விடயம் தொடர்பாக மேலும் அவர் குறிப்பிடுகையில்,

"முற்றுகையிடப்பட்ட பகுதியில் உள்ள நிலைமையை சர்வதேச அளவில் நாடுகள் கண்காணிக்க வேண்டும்.

இஸ்ரேல் எல்லைக்குள் புகுந்து முன்னறிவிப்பின்றி ஹமாஸ் அமைப்பு நடத்திய தாக்குதல் [illegible] வெற்றிடத்தில் ஏற்பட்டதல்ல.



காசாவில் பல தசாப்தங்களாக காணப்பட்ட தடைகள் மற்றும் பாலஸ்தீனர்களுக்கு தனி நாடு இருக்கும் என அளித்த வாக்குறுதிகள் தசாப்தங்களாக நிறைவேற்றப் படாதது ஆகியவற்றால் இந்த தாக்குதல் நடத்தப்பட்டு உள்ளது.

இஸ்ரேலில் இருந்து காசாவுக்கு 240 பேர் பணய கைதிகளாக பிடித்து செல்லப்பட்டனர். அவர்களை மீட்கும் முயற்சியில் இஸ்ரேல் பாதுகாப்பு படை ஈடுபட்டது.

இதன்பின்பு போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு, பணய கைதிகள் சிலர் விடுவிக்கப்பட்டனர். பதிலுக்கு பாலஸ்தீன கைதிகளும் சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டனர். எனினும் போரானது முடிவுக்கு வராமல் உள்ளது எனத் தெரிவித்தார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாஸ்த்துவாகி வீடுகளில் விருந்தோம்பும் ஆகாயத்தாமரை எனும் அந்நியக்களை



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை, விவசாய பீடம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

ஆகாயத்தாமரை (water lily or water cabbage) என்பது நீரில் மிதந்து வாழுகின்ற அகன்ற சிறிய மற்றும் பெரிய மென்பச்சையிலிருந்து வன்பச்சை நிறமான இலைகளைக் கொண்ட விரிவான வேர்த்தொகுதியையும் கொண்டுள்ள ஒரு ஒருவித்திலைத் தாவரமாகும். இது உலகின் பலநாடுகளில் களையாக கருதப்பட்டுள்ளது. நீர்நிலைகளில் விரைந்து பெருகும் தன்மையுடைய ஆகாயத்தாமரை (Pistia stratiotes) விதை மூலமும் ஓடிகள் மூலமாகவும் பரவும் தன்மையுடையது. நீர்நிலைகளில் பரந்து வளர்வதனால் இத்தாவரத்தை அகற்றுவது அல்லது அழிப்பதென்பது இயலாததாகவே கணிப்பிட்டுள்ளனர்.

எம்மவர்களிடையே ஜதீகம் என்பது தவிர்க்க முடியாதது என்றாலும் எமது புரிந்துணரும்நுண்ணறிவு மூலமாவது எம்மை நோக்கி வரும் இடர்களை தவிர்த்து விடவோ அன்றி அவற்றிலிருந்து மீளவோ முடியும். நீரேந்தும் இடங்களில் வந்தேறிய குடியான நீர்வாழ் தாவரமான ஆகாயத்தாமரை ஆக்கிரமிக்கும் அந்நியக் களையாக தென்பகுதியில் பல நீர்நிலைகளில் பரவத் தொடங்கி அதனை களையாக இனங்கண்டு அதனை அழித்திட பகிரப்பிரயத்தனம் செய்து வருகின்ற நேரத்தில் தற்போது எமது மக்களின் விசித்திர ஆசையினால் பலருடைய வீடுகளில் வளர்க்கப்படுகின்றதென்னும் செய்தியும் வந்திருக்கின்றது. இப்போதைக்கு இந்த தாவரத்தை வீடுகளில் வளர்ப்பதென்பது விரைந்து வியாதியை வரவழைக்கும் செய்தியாகவே பார்க்கப்படுகின்றது.

ஆகாயத்தாமரை என்னும் நீரில் மட்டும் வாழும் ஒருவகை ஒருவித்திலைத் தாவரம் எமது நாட்டிற்கு அந்நியக்களையாக வந்து சேர்ந்து தற்போது வாஸ்த்துவாகி பலருடைய வீடுகளில் ஆக்கிரமிக்கும் உக்கிரத்தில் சிறிய நீர்த்தொட்டிகளில் பிளாஸ்ரிக் கொள்கலன்களில் அழகுத் தாவரமாக பிறப்பெடுத்திருக்கின்றது. இதனது வளர்ச்சிக்கு மண் தேவையில்லை என்பதனாலும் முழுக்க முழுக்க நீர் ஊடகத்தில் வளரக்கூடிய தன்மையுடையதனாலும் ஆகாயத்தாமரையை அனைவரும் விரும்பி வளர்க்க முனைகின்றனர்.


தென்பகுதியில் உள்ள நீர்த் தடாகங்களில் குளங்களில் இத்தாவரமானது களையாக பல்கிப் பெருகி வருவதனால் இதனை அழிப்பதற்கு பணத்தை செலவு செய்து திண்டாடிக் கொண்டிருக்கும் நிலையில் இங்கே எம்மவர்கள் அழகு பார்த்து அதனை நீர்த்தொட்டிகளில் வளர்க்கும் நிகழ்வுகளும் அதனை வாஸ்த்துவாக்கி அதற்கு முக்கியத்துவமும் கொடுக்கப்பட்டிருக்கின்றது. காகம் இருக்க பனம்பழம் விழுந்த கதைபோல ஆகாயத்தாமரையை வளர்ப்பதனால் நினைத்தது நடப்பதாக ஒரு கதையை கட்டிவிட்டு தற்போது பலரும் இதனை தத்தமது வீடுகளில் வளர்ப்பதற்கு ஆர்வம் காட்டி வருகின்றனர்.

களையாக பரவுவது ஒருபுறம். ஆபத்தானதாக அதனை அழிக்க முடியாமல் திண்டாடும் போது இத்தாவரம் வளரும் இடங்களில் நுளம்பு பல்கிப் பெருகுவதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. நுளம்பு பெருகும் வழிகளை நாம் தவிர்க்கவும் இல்லாதொழிக்கவும் பாடுபடும் இந்நேரத்தில் குறிப்பாக மழைக்காலங்களில் நுளம்பு பெருகும் வாழிடங்களை நாமே உருவாக்கி விடக்கூடாது. இதனை நாம் பொதுமக்கள், அயலவர், உறவினர் அதனையும் மீறி எமக்காக நாம் செய்யவேண்டிய கடப்பாடுடையவர்களாவோம்.

வீடுகளில் அழகுத் தாவரங்கள் வளர்க்கப்படும் கொள்கலன்கள், பிளாஸ்ரிக் பைகள் மற்றும் பக்கறுகள் என்பனவற்றில் நீர் தேங்கி நில்லாமல் அவசியம் பார்த்துக் கொள்ளல் அவசியமானதாகும். வீடுகள் தவிர்ந்த காணிகளிலுள்ள பகுதிகளில் மழைநீர் தேங்கி நில்லாமல் சிரட்டைகள், கோம்பைகள், போத்தல்கள் இன்னும் பிளாஸ்ரிக் பைகள் என எதனிலும் நீர் தேங்கியிருக்காமல் பார்த்துக்கொள்ளல் மிக மிக அவசியம் [illegible] நுளம்பினை உருவாக்கி விடுபவர்கள் நாமாகில் அதனால் ஒரு உயிர்காவு கொள்ளப்பட்டால் அதற்கு நாமும் உடந்தை என்பதனை உணர்ந்து கொள்ள வேண்டும்.

மேற்கூறிய அனைத்தையும் விட நல்ல செய்தியும் இத்தாவரம் பற்றி உண்டு. அதுதான் இதனது மூலிகைக் குணம். இத்தாவரத்தின் பாகங்களைப் பயன்படுத்தி நீரிழிவு, சிறுநீரக சிறுநீர்ப்பை கோளாறுகள் மற்றும் மலமிழக்கியாகவும் சிறுநீர்ப் பெருக்கியாகவும் சுதேச மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகின்றது. எந்தத் தாவரத்திற்கும் மருத்துவக் குணங்கள் இருப்பது சிறப்பே. ஆனால் களையாக பல்கிப் பெருகும் போது இதனை வலிந்து கட்டுப்படுத்தாவிடின் அதனால் ஏற்படும் சுகாதார சீர்கேட்டுக்கும் சூழல் பிரச்சினைகளுக்கும் முகங்கொடுக்க வேண்டியிருக்கும்.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



ஆகாயத்தாமரை வீடுகளில் கவனமின்றி சுகாதாரத்திற்கு பங்கம் விளைவிக்கும் நிலையில் வளர்க்கப்படுமாயின் சுகாதார பரிசோதகர்கள் வீடுகளுக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளை அவதானித்து மக்களுக்கு அறிவுரையும் தேவைப்படும் போது அறிவுறுத்தலும் அதிலும் கவனக்குறைவானால் விரைந்து நடவடிக்கையும் எடுத்தல் வேண்டும். நுளம்பினால் பரவும் நோய்களைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்காவிட்டால் பல உயிர்களை நாம் காவுகொள்ள வேண்டியிருக்கும். நீரேந்து நிலைகள், நீர்பிடிப்பு கொள்கலன்கள் அனைத்தையும் அப்புறப்படுத்துவது மிகவும் நல்லது. தேவையற்ற பொருட்களாயின் அவற்றை விலைக்கோ அல்லது இனாமாகவோ கொடுத்து அதிலிருந்து உருவாகும் நோய்களின் தோற்றுவாயை தன்மையை குறைத்துக் கொள்ளலாம்.

மாறாக ஆகாயத்தாமரையை பசளையாக்கி அதிலிருந்து பயிர்ச் செய்கைக்கான ஊட்டச்சத்தை பயிர்களுக்கு வழங்கும் வழிமுறைகளையும் பல ஆய்வுகள் வெளிக் கொணர்ந்திருக்கின்றன. கடற்சாதாளையை உக்க வைத்து சிறந்த சேதன உரத்தை பெறுவது போல ஆகாயத்தாமரையை உக்க வைத்து அதனை பசளையாக பயன்படுத்தும் தொழில்நுட்பம் இலகுவா க்கப்படல் வேண்டும். இத் தொழிற்றுறை உருவானால் நீர்நிலைகளில் பல்கிப் பெருகும் ஆகாயத்தாமரையை மக்களாகவே பெற்று தமக்குரிய தொழிற்றுறையை உருவாக்கிக் கொள்ளலாம். சேதன பசளைகளுக்கு இனிவருங் காலங்களில் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உருவாக்கப்படுகின்றன. அதனால் இது போன்ற சேதன உரத்தை பெறக்கூடிய வாறான வழிமுறைகளை இனங்கண்டால் அவற்றை பயன்படுத்துவதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பது அவசியமாகின்றது. பல தாவரங்களை ஒன்றிணைத்து பயிர்களுக்கு தேவையான ஊட்டச்சத்தை வழங்கக்கூடிய சேதன உரத்தை தயாரித்துக் கொள்ள முடியும். அனைத்தும் ஒருங்கிணைந்த செயற்பாடாக ஆக்கிக் கொண்டால் இவ்வாறான களைகளை அவற்றின் பெறுமதியிழக்கும் நேரத்தில் சேதனப் பசளையாக மாற்றிக் கொண்டால் பயன்பாடும் அதிகம். அதனால் சூழல் மாசடைவதைத் தவிர்க்கவும் முடியும்.

களையாக நுளம்பு பெருகும் வாழிடமாக சூழலுக்கு பங்கம் தரும் தாவரமாக வளரும் ஆகாயத் தாமரை மருத்துவக் குணங்களும் கொண்டதென்பதனால் இவ்விடயத்தை தெரிந்தவர்கள் இத்தாவரத்தை வளர்க்க விடாது அதற்குப் பதிலாக வேறு தாவரங்களை மாற்றிக் கொடுக்க முன்வரவேண்டும். அனைத்திற்கும் மேலாக மக்களுக்கு விழிப்புணர்வினை அதிகரிக்கவும் வரப் போகும் இடர்களுக்கு முன்கூட்டியே முன்னெச்சரிக்கையாக செய்யும் அனைத்தும் பயனுள்ளதாக மாற்றம் பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரற்ற காலநிலை காரணமாக வீதியை மேவிப்பாயும் வெள்ள நீர்

(கிளிநொச்சி)




கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புன்னை நீராவி கிராம அலுவலர் பிரிவில் சில வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சுண்டிக்குளம் சந்தியூடாக கல்லாறு மற்றும் சுண்டிக்குளம் கடற்கரை செல்லும் பிரதான வீதியை குறுக்கறுத்து வெள்ளநீர் பாய்ந்து வருவதால் வீதியால் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் அதே பகுதியில் உள்ள சில வீடுகளுக்குள் வெள்ள நீர் உட்புகுந்ததன் காரணமாக மக்கள் அயலவர்களின் வீடுகளில் தங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6-316)

# வான்பாயும் வவுனிக்குளம்



(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் முக்கிய குளங்களின் ஒன்றான வவுனிக்குளம் வான் பாயத் தொடங்கி உள் ளது.

வான் பாய்வதைத் தொட ர்ந்து நீர் மகளை வரவேற்கும் முகமாக குளத்தின் கீழான விவசாய அமைப்புக்கள் மற்றும் மாகாண மற்றும் வவுனிக் குளம் நீர்ப்பாசன திணைக்களத்தினர் நீருக்கு பொங்கல் படையல் வைத்து தமிழர் பாரம்பரிய முறைப்படி வழிபட்டு நீர் பாய்வதை நேற்று முன்தினம் வர வேற்றனர். குளத்தின் நீர்மட்டம் 26 அடி 5 அங்குலமாக வான் பாய்கின்றது. (நி-5-6-350)

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவன் ஒருவர் கஞ்சாவுடன் கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், நேற்று முன் தினம் குறித்த மாணவனை பொலிஸார் கஞ்சா போதைப்பொருளுடன் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மாணவனை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-5-6-33)


## நகராட்சி மன்றம்-சாவகச்சேரி
## படவரைஞர்களை பதிவு செய்தல்/புதுப்பித்தல்-2024

2024ஆம் ஆண்டில் நகராட்சிமன்றம், சாவகச்சேரியில் கட்டட அனுமதிகளுக்கான வரைபடங்களை வரைந்து சமர்ப்பிக்க விரும்பும் படவரைஞர்கள் மற்றும் புதுப்பிக்க விரும்புவோர் கீழ்வரும் விடயங்களினை கருத்திற்கொண்டு விண்ணப்பப் படிவத்தினை பெற்று உரிய ஆவணங்களுடன் 28.12.2023 ஆம் திகதி மதியம் 12.00 மணிக்கு முன்னர் உரிய கட்டணத்தைச் செலுத்தி பதிவுகளை மேற்கொள்ளலாம்.

புதிதாக பதிவுசெய்ய விரும்புவோர் மற்றும் புதுப்பித்துக் கொள்ளவிரும்புவோர் **Drafting Technology (Buildings)** கற்கை நெறியினை **NVQ-Level -5** இனை பூர்த்தி செய்துள்ள நிலையில் உரிய சான்றிதழுடன் பதிவுகளை மேற்கொள்ளலாம். அல்லது **NVQ-Level -4** கற்கை நெறியினை பூர்த்தி செய்துள்ளவர்கள் தேசியசான்றிதழ் தர படவரைஞர் (கட்டடம்) **Drafting Technology(Buildings) NVQ-Level-5** கற்கை நெறியினை தொடர்வதனை உறுதிப்படுத்தும் கடிதத்தினை உரிய கல்வி நிறுவனத்திடமிருந்து பெற்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும் எனும் நிபந்தனைகளுடன் பதிவுகளினை மேற்கொள்ளலாம்.

மேற்குறிப்பிட்ட திகதிக்குள் பதிவு செய்தல் அல்லது பதிவுகளினை புதுப்பிக்கத் தவறும் படவரைஞர்கள் எமது நகராட்சி மன்றத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான படவரைஞர்களாக செயற்பட முடியாது.

மேலதிக விபரங்கள், நிபந்தனைகளை சாவகச்சேரி நகராட்சிமன்ற அலுவலகத்தில் கடமை நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**செயலாளர்,**
**நகராட்சிமன்றம் சாவகச்சேரி.**

(C-7882) **திகதி :13.12.2023**


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2988

### கனுசன்




### நதியா




### அஞ்சலா




### மடோனா




### சித்திரா




### றொபின்சன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 352





"ஐயா! தாங்கள் இப்போது சொன்னது மனப்பூர்வமாகக் கூறின வார்த்தையா? அல்லது உலகத்தில் விட புருஷர்கள் பர ஸ்திரீகளிடம் சொல்லும் முகஸ்துதியா?"

"முகஸ்துதியல்ல சத்தியமாக என் மனத்தில் இருப்பதையே சொன்னேன்."

"அப்படியானால் என்னைப் பூரணமாக நம்புவீர்களா? நம்பி எனக்காக ஓர் உதவி செய்வீர்களா?"

"என்னால் முடிகிற காரியம் எதுவாயிருந்தாலும் அதைச் செய்யச் சித்தமாயிருக்கிறேன்."

"எனக்காகத் தாங்கள் காஞ்சிக்குப் போக வேண்டும்."

"காசிக்குப் போகச் சொன்னாலும் போகிறேன்."

"அவ்வளவு தூரம் போக வேண்டியதில்லை. காஞ்சியில் உள்ள இளவரசர் ஆதித்த கரிகாலருக்கு ஒரு நிருபம் கொடுப்பேன். அதை அவரிடம் சேர்ப்பிக்க வேண்டும். சேர்ப்பித்து விட்டு அவரைத் தங்கள் கடம்பூர் அரண்மனைக்கு விருந்தாளியாக அழைக்க வேண்டும்."

"தேவி! இது என்ன வார்த்தை சொல்கிறீர்கள்? தங்கள் கணவரும், என் தந்தையும், மற்றும் பல சோழ நாட்டுப் பிரமுகர்களும் இராஜ்யத்தைப் பற்றிச் செய்து வரும் ஏற்பாடு தங்களுக்குத் தெரியாதா?"

"நன்றாய்த் தெரியும் அதை விட இன்னும் சில செய்திகளும் தெரியும். ஐயா! தங்கள் குடும்பமும், என் குடும்பமும் மற்றும் பல பெரிய குடும்பங்களும் பெரும் அபாயத்தின் வாசலில் நின்று வருகின்றன. அதற்குக் காரணம் யார் தெரியுமா?"

"சொல்லுங்கள், தேவி!"

"இன்று மத்தியானம் இங்கு விருந்தாளியாக வந்திருந்தாளே அந்தப் பாதகிதான்!"

"ஐயையோ! இளைய பிராட்டியையா சொல்கிறீர்கள்?"

"அந்த நாகப் பாம்பைத் தான் சொல்கிறேன். பாம்பின் கால் பாம்பு அறியும். குந்தவையின் சூழ்ச்சி இந்த நந்தினிக்குத் தான் தெரியும். உம்முடைய சிநேகிதன் வந்தியத்தேவனை அவள் இலங்கைக்கு அனுப்பியிருக்கிறாள். எதற்காகத் தெரியுமா? மூலிகைகொண்டு வருவதற்கு என்பது பெரும் பொய்! சுந்தர சோழர் பிழைக்க வேண்டுமே என்று அவள் தவித்துக் கொண்டிருக்கவில்லை. அவருக்குப் பிறகு மதுராந்தகரும் பட்டத்துக்கு வரக்கூடாது. ஆதித்த கரிகாலரும் பட்டத்துக்கு வரக்கூடாது. அவளுடைய அருமைத்தம்பி அருள்மொழி வர்மன் வரவேண்டும் என்பது அவள் எண்ணம். அருள்மொழி வர்மன் பட்டத்துக்கு வந்தால் இவள் இஷ்டம்போல் ஆட்டி வைக்கலாம். அப்புறம் சோழ சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தினி குந்தவை தேவிதான்! சக்கரவர்த்தி யார் தெரியுமா? உங்கள் சிநேகிதன் வந்தியத்தேவன்!"

"ஆகா! அப்படியா? இதை எப்படியாவது தடுத்தே தீர வேண்டும். என் தந்தையிடமும், பழுவேட்டரையர்களிடமும் உடனே சொல்ல வேண்டும்."

"அவர்களிடம் சொல்லிப் பயன் இல்லை. அவர்கள் நம்பமாட்டார்கள். குந்தவையின் தந்திரத்தை மாற்றுத் தந்திரத்தால் வெல்ல வேண்டும். நீர் உதவி செய்தால் வெல்லலாம்!"

"கட்டளையிடுங்கள், தேவி!"

"இதோ இந்த ஓலையைச் சர்வ ஜாக்கிரதையாகக் கொண்டுபோய்க் காஞ்சியில் ஆதித்த கரிகாலரிடம் கொடுக்க வேண்டும். கொடுப்பீர்களா?" என்று சொல்லிக் கொண்டே ஓலைச்சுருளையும் அதைப் போட வேண்டிய குழலையும் நீட்டினாள்.

மோக வெறியில் மூழ்கிப் போயிருந்த கந்தன்மாறன் ஓலைச் சுருளையும் குழலையும் வாங்கிக் கொள்வதற்குப் பதிலாக நந்தினியின் கரத்தைப் பிடித்துக் கொண்டு, "தங்களுக்காக எது வேண்டுமானாலும் செய்வேன்!" என்று உளறினான்.

அச்சமயம் சடசடவென்று ஒரு சத்தம் கேட்டது. பழுவேட்டரையர் அரண்மனையிலிருந்து லதா மண்டபத்துக்கு வரும் பாதையில் விரைந்து வந்து கொண்டிருந்தார்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## மக்கள் நேர்மையானவர்களா?



ஒருநாள் அக்பர் தனது அரசவையில் கூடியிருந்தவர்களிடம், "எனது அரசாட்சியில் மக்கள் நேர்மைக்கு எடுத்துக்காட்டாக வாழ்வது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. இது பற்றி உங்கள் கருத்து என்ன?" என்று கேட்டார்.

உடனே சபையிலிருந்த அனைவரும் "ஆம் அரசே உங்கள் பொன்னான ஆட்சியில் அனைவரும் நேர்மையைக் கடைபிடிக்கின்றனர். இதை யாரும் மறுக்கவே முடியாது." என்றனர்.

ஆனால் பீர்பால் மட்டும் அமைதியாக இருப்பதைக் கண்ட அக்பர், "ஏன் மௌனமாக இருக்கிறாய் பீர்பால் மக்கள் நேர்மையாக இருப்பதைப் பற்றி உன் கருத்து என்ன?" என்று கேட்டார். உடனே பீர்பால், "இதற்கு நான் பதிலளிக்க வேண்டுமென்றால், நீங்கள் ஒரு காரியம் செய்ய வேண்டும் அரசே மக்கள் அனைவருக்கும் நீங்கள் விருந்து வைக்க வேண்டும். விருந்துக்கு வரும்போது ஒரு குடத்தில் பால் கொண்டு வர வேண்டும் என்று உத்தரவிட வேண்டும்." என அக்பரிடம் வேண்டுகோள் வைத்தார்.

பீர்பால் கேட்பதில் ஓர் உள்ளர்த்தம் இருப்பதை உணர்ந்து கொண்ட அக்பர், உடனே விருந்து பற்றி பொதுமக்களிடம் தெரிவிக்கும் படி உத்தரவிட்டார்.

தண்டோரா போட்டபடியே அனைத்து வீதிகளுக்கும் சென்ற அரசவை அறிவிப்பாளர், "நமது பேரரசர் அனைவருக்கும் விருந்து வைக்கிறார். விருந்துக்கு வருவோர் கண்டிப்பாக ஒரு குடத்தில் பால் கொண்டு வர வேண்டும். இது அரசு உத்தரவு," என்று உரத்த குரலில் அறிவித்தார்.

இதைக் கேட்டு குழப்பமுற்ற மக்களில் பலர், "அரசர் விருந்தளிப்பது மிகுந்த மகிழ்ச்சிக்குரிய விஷயம் தான். ஆனால் குடத்தில் எதற்காக பால் கொண்டு செல்ல வேண்டும். " என்று ஒருவரை ஒருவர் கேட்டுக்கொண்டனர். அங்கிருந்த பெண்கள், "சரி ஒரு குடம் பால் தானே கொண்டு போய் என்ன நடக்கிறது என்று பார்ப்போம்" என்று குழப்பத்துடன் கூறிவிட்டு அங்கிருந்து நகர்ந்தனர்.

அரசர் அறிவித்த விருந்து நடை பெறும் நாள் வந்தது. அக்பர், பீர்பால் உட்பட அரசவையில் முக்கியப் பதவிகளில் இருப்போர் அனைவரும் கூடியிருந்தனர். பீர்பால் ஏற்பாட்டின்படி, திடலின்பிரதான வாசலில் மிகப் பெரிய பாத்திரம் மூடி போட்டு வைக்கப்பட்டிருந்தது. மூடியில் பெரிய ஓட்டை போடப்பட்டிருந்தது.

பொதுமக்கள் அனைவரும் உத்தரவின் படி தாங்கள் கொண்டுவந்த பாலை, மூடியிலிருந்த ஓட்டை வழியாக பாத்திரத்தில் கொட்டி விட்டு வெறும் குடத்துடன் திடலுக்குள் நுழைந்தனர். இதைப் பார்த்துக் கொண்டிருந்த அக்பர், "நீ சொன்னபடி செய்தாகிவிட்டது பீர்பால். இவ்வளவு பாலையும் என்ன செய்யப் போகிறாய்?" என்று கேட்டார்.

உடனே பீர்பால் காவலர்களைப் பார்த்து, "பாத்திரத்தை மன்னருக்கு அருகில் கொண்டு வாருங் கள்" என உத்தரவிட்டார்.

பாத்திரம் அருகில் கொண்டுவரப்பட்டதும், அதன் மூடியை அகற்றச் சொன்னார் பீர்பால். மூடி அகற்றப்பட்டதும் பாத்திரத்தைப் பார்த்த மன்னர், அதில் வெறும் தண்ணீர் மட்டுமே இருப்பதைக் கண்டு அதிர்ச்சியில் உறைந்து போனார். "பீர்பால் என்ன இது, பால் இருக்க வேண்டிய பாத்திரத்தில் வெறும் தண்ணீர் உள்ளதே?" என அதிர்ச்சி மாறாமல் கேட்டார்.

ஆனால் இதை முன்பே எதிர்பார்த்தது போல நிதானமாக பேசிய பீர்பால், "மக்களின் நேர்மை பற்றி என்னிடம் நீங்கள் கேட்ட கேள்விக்கு இதுதான் பதில் அரசே! மற்றவர்கள் பால் கொண்டு வரட்டும், நாம் தண்ணீர் கொண்டு போய் பாத்திரத்தில் கொட்டினால் யார் கண்டுபிடிக்க முடியும் என்று ஒவ்வொருவரும் நினைத்துள்ளனர். எனவே தான் பாத்திரம் முழுதும் தண்ணீர் உள்ளது. கூட இருப்பவர்களின் பேச்சைக் கேட்டு எந்த முடிவுக்கும் வந்து விடக் கூடாது அரசே.." என்று சிரித்தபடியே கூறினார்.

பீர்பாலின் அறிவுக் கூர்மையை மெச்சிய அக்பர், அவரை ஆரத் தழுவிக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையை உறுதியாகக் கடைப்பிடிப்பதில் இருந்துதான் வலிமை எல்லாம் கிடைக்கிறது.
~ காந்திஜி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## உலகத் தமிழர் பேரவையின் வருகையும் தருகையும்

உலகத் தமிழர் பேரவையின் தூதுக் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் உள்ளிட்ட அரசியல் தலைவர்களையும் பௌத்த பீடாதிபதிகளையும் சந்தித்துள்ளது.

இதற்கு மேலாக, யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த உலகத் தமிழர் பேரவைக் குழுவினர் நல்லை ஆதீன சுவாமிகள், யாழ்ப்பாண ஆயர் உள்ளிட்ட சமயத் தலைவர்களையும் சந்தித்து கலந்துரையாடியதுடன் நேற்று முன்தினம் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களை இரா.சம்பந்தரின் இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இலங்கையில் நீடித்து நிற்கும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது கட்டாயமானதென்ற அடிப்படையில் உலகத் தமிழர் பேரவைத் தூதுக்குழுவின் வருகை அமைந்ததெனக் கூறப்படுகிறது.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டாக வேண்டும் என்ற நோக்கில் இலங்கைக்கு வருகை தந்து, முழுத்தளவு அனைத்துத் தரப்பினரையும் சந்தித்த குழுவினரின் இலங்கை விஜயத்தின் நோக்கம் எந்தளவு தூரம் இலக்கை எட்டியதென்பதை அவர்களும் காலமுமே சொல்ல வேண்டும்.

இஃது ஒருபுறமிருக்க, இலங்கைக்கு வருகை தந்த உலகத் தமிழர் பேரவையின் தூதுக் குழுவில் பௌத்த துறவிகள் அடங்கியிருந்தமை விசேட அம்சமெனலாம்.

அதாவது, வெளிநாடுகளைச் சேர்ந்த பௌத்த துறவிகள் இங்கு வருவது இலங்கையில் பௌத்த மதம் எங்ஙனம் தனது பௌத்த தர்மத்தைப் பேணிப் பாதுகாக்கின்றதென்பதையும், பௌத்த துறவிகள் எப்படியாகத் தமது துறவு ஒழுக்கத்தைப் பின்பற்றுகின்றனர் என்பதைத் தெரிந்து கொள்வதற்கும் உதவியாக இருக்கும்.

அதேநேரம் வெளிநாட்டில் இருக்கக்கூடிய பௌத்த துறவிகள் கூறுவதை இலங்கையில் இருக்கக்கூடிய பௌத்த துறவிகள் எந்தளவு தூரம் ஏற்றுக் கொள்வார்கள் என்பது ஐயத்துக்குரியதே.

எதுவாயினும் பௌத்த துறவிகளையும் தூதுக்குழுவில் உள்ளடக்கியவாறு உலகத் தமிழர் பேரவையின் விசேட குழு இலங்கைக்கு வருகை தந்து முக்கிய தலைவர்களுடன் சந்திப்புக்களை நடத்தியமைக்குப் பின்னணியாக ஒரு பலமான சக்தி உள்ளதா? என்ற கேள்வி எழவே செய்யும்.

அவ்வாறானதொரு கேள்வி எழுவதற்குள் கனதியான நியாயப்பாடு உண்டென்பது மறுக்க முடியாத உண்மை.

காரணம் ஒரு பலமான சக்தி இல்லாமல் எழுந்தமானமாக உலகத் தமிழர் பேரவையினர் இலங்கைக்கு வந்து சம்பந்தப்பட்ட தரப்புகளைச் சந்தித்துவிட்டு செல்வது மட்டும் எந்த விமோசனத்தையும் தரமாட்டாது.

தவிர, அவ்வாறானதொரு வருகையை மிக அதிகமான செலவுகளுடன் உலகத் தமிழர் பேரவை செய்யாது. செய்ய வேண்டிய தேவையும் இருக்காது.

எதுஎவ்வாறாயினும் உலகத் தமிழர் பேரவையின் இலங்கை வருகை தமிழ் மக்களிடம் மிக நுண்ணிய தாக்கத்தை கூட ஏற்படுத்தவில்லை. அவர்களின் வருகை தமிழர்களின் அவதானத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் அது அவர்களின் வருகைக்குப் பின்பான தருகையிலேயே தங்கியுள்ளது.

## கந்தக்காடு புனர்வாழ்வு முகாமிலிருந்து தப்பி ஓடிய 130 பேரும் கைது

(கொழும்பு)

வெலிகந்தை கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்திலிருந்து நேற்றுமுன்தினம் இருதடவைகள் பாதுகாப்பு வேலியை உடைத்து தப்பிஓடிய 130 கைதிகளை கைது செய்துள்ளதாக வெலிகந்த பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், சம்பவ தினமான நேற்று முன்தினம் மாலை பாதுகாப்பு வேலியை உடைத்து 50 கைதிகள் தப்பி ஓடியதையடுத்து இரவு 7 மணியளவில் 80 பேர் மீண்டும் பாதுகாப்பு வேலியை உடைத்து தப்பி ஓடியுள்ளனர்.

இந்த நிலையில் இரவு இரவாக இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து இரு சம்பவங்களிலும் தப்பி ஓடிய 130 பேரையும் கைது செய்துள்ளனர்.

இதில் கைது செய்யப்பட்டவர்கள் தங்களுக்கு புனர்வாழ்வு நிலையத்தில் கட்டுப்பாடுகள் அதிகம் எனவே இங்கு இருக்க முடியாது. தங்களை சிறைச்சாலையில் அடைக்குமாறு கோரியே இவர்கள் அங்கிருந்து தப்பி ஓட முயற்சித்தாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிகந்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் போதைபொருளுக்கு அடிமையாகிய சுமார் 500 மேற்பட்ட கைதிகள் புனர்வாழ்வு பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## இடைக்கால கிரிக்கெட் குழுவை இரத்து செய்ய தீர்மானம்

முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சரினால் நியமிக்கப்பட்ட இடைக்கால கிரிக்கெட் குழுவை விளையாட்டுத் துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ இரத்து செய்ய தீர்மானித்துள்ளார்.

மேலும், இடைக்கால குழுவை நியமிக்கும் தீர்மானத்தை இரத்து செய்யும் வர்த்தமானியில் கையொப்பமிட்டுள்ளதாக அவர் தனது "எக்ஸ்" தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இந்நிலையில் சர்வதேச கிரிக்கெட் பேரவையினால் இலங்கைக்கு விதிக்கப்பட்டுள்ள கிரிக்கெட் தடையை நீக்கும் நோக்கில் இந்த தீர்மானத்தை எடுத்ததாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## ஆலயத்தில் திருட்டு பூசகர் கைது

(யாழ்ப்பாணம்)

ஆலய விக்கிரகங்களின் கீழ் உள்ள நகைகள் மற்றும் பொற்காசு என்பவற்றை திருடி விற்பனை செய்த குற்றச்சாட்டில் பூசகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தீவகம், ஊர்காவற்றுறையில் உள்ள இரண்டு ஆலய விக்கிரகங்களை மேலெழுப்பி அவற்றின் கீழ் இருந்த மோதிரம் மற்றும் பொற்காசு என்பற்றை அவர் திருடியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொக்குவிலைச் சேர்ந்த 27 வயதுடைய பூசகரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து 5 பவுண் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

பொலிஸ் பரிசோதகர் தெ.மேனன் தலைமையிலான யாழ் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர் பிரதீப்பின் குழுவே இந்தக் கைது நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர். (ம-7,33)

## மட்டக்களப்பிலும் பொலிஸ் பதிவு

மட்டக்களப்பில் பொலிஸார் மீண்டும் குடியிருப்பாளர்களின் விபரங்களை கோரும் விண்ணப்பப் படிவம் ஒன்றை வழங்கி தகவல் சேகரித்து வருகின்றனர்.

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசங்களில் முழு விபரங்களும் அடங்கிய விண்ணப்பப்படிவம் ஒன்றை வழங்கி பொது மக்களின் தகவல்களை பெறும் நடவடிக்கையினை முன்னெடுத்துள்ளனர்.

பொலிஸ் பிரிவில் வசிக்கும் குடியிருப்பாளர்கள் மற்றும் தங்கியிருப்பவர்களின் விபரங்களை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவம் 1865 ஆம் ஆண்டின் 16ம் இலக்க பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் 75வது பிரிவுக்கு அமைவாக செயற்படும் ஆணை எனும் தலைப்பிலேயே காணப்படுவதாக பொதுமக்கள் தெரிவித்தனர். (ம-7)

## ஒன்லைன் விசாவுக்கு முகவர் நியமனம்

இலங்கைக்கு சுற்றுலா மேற்கொள்ளும் வெளிநாட்டவர்களுக்கான விசா விண்ணப்பங்களை இணையவழி மூலமாக விண்ணப்பிக்க புதிய நடைமுறையை அரசாங்கம் அறிமுகம் செய்யவுள்ளது.

விசா விண்ணப்பங்களை இணையவழிமூலமாக விண்ணப்பிப்பதற்காக அதிகாரமளிக்கப்பட்ட முகவர் ஒருவரை நியமிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்காக ஜி.பி.எஸ். தொழில்நுட்ப சேவை மற்றும் ஐ.வி.எஸ். க்ளோபல், வி.எப்.எஸ். உள்ளிட்ட நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அலோசனைகள் குறித்து பரிசீலிக்கப்பட்டுள்ளன.

முகவர் ஒருவரை நியமிப்பது தொடர்பில் கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய நியமிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையின் பரிந்துரைகளுக்கமைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், சட்டமா அதிபரின் அவதானிப்புகளுக்கமைய வரைவாக்கம் செய்யப்பட்டுள்ள இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ம-7)

## யாழில் ஊசி மூலம் போதை ஏற்றல் அதிகரிப்பு
### யாழ் மாவட்ட அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஊசிமூலம் போதைப் பொருளை ஏற்றும் போக்கு அதிகரித்துள்ளது என யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

சட்ட வைத்திய அதிகாரிகளின் தகவல் படி யாழ்ப்பாண மாவட்டத்தில் ஊசி மூலம் போதைப்பொருளை ஏற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரிடம் பேசி நடவடிக்கைக்கு வலியுறுத்தியுள்ளேன்.

சில இடங்களைமையப்படுத்தி விசேட வேலைத்திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என்றார். (ம-7,33)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **வியாழக்கிழமை காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ். பிரதேசத்தில்** இந்திர அம்மன் கோவில், தாமரை குளத்தடி, வலிக்கன் தோட்டம்-துன்னாலை ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** சி.இ.சி கல் உடைக்கும் ஆலை, அளுத்வக்க, போகஸ்வேவா, மாமடுவ கிராமம், மகாகச்சக்கொடிய, மல்மடுவா (மகாகச்சக்கொடிய), நாமல்கம, நந்திமித்திரகம, பிரப்பன்மடு, சலலிங்கம ஆகிய இடத்திலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலும் புதிய ஊழல் தடுப்புச் சட்டமும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?



12


**கலாநிதி க.தவலிங்கம்**
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.


மாவனல்ல நகர எல்லைக்குள் அமைந்துள்ள முறைப்பாட்டாளருக்கு சொந்தமான காணி ஒன்றின் ஒரு பகுதியில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டிடத்தின் வரைபடத்தை அங்கீகரிப்பதற்கும் கையொப்பமிடுவதற்கும் மேற்குறிப்பிட்ட தவிசாளர் 2 மில்லியன் ரூபா இலஞ்சம் கோரியுள்ளார்.

சந்தேகநபர் மாவனல்ல சீதா உணவகத்தின் மாடியில் வைத்து 20 இலட்சம் ரூபா இலஞ்சம் பெற்றுக்கொண்டு குறித்த பணத்தை உணவகத்திலிருந்து மாவனல்ல பிரதேச சபையில் கடமையாற்றும் சாரதி ஒருவரின் ஊடாக வெளியாள் கொண்டுசெல்ல முயற்சித்த போதே கைது செய்யப்படடுள்ளார்.

### சில குற்றத்தீர்ப்புக்கள்

**1. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரண குணவர்தனவிற்கு 3 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பு (2017).**

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரண குணவர்தன அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவராக பணியாற்றி வந்தபோது, தனது மனைவியிடமிருந்து லொத்தர் சபையின் பாவனைக்கு வாடகைக்கு பெறப்பட்ட வாகனாங்களில் தலா ஒவ்வொரு வாகனத்திற்கும் உண்மையான வரி ரூபா 635, 000.00 ஆக இருந்த நிலையில், ரூபா 960,000.00 வீதம் முறையற்ற விதத்தில் வரி செலுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களினால் அரசுக்கு நட்டம் ஏற்படுத்தியதன் அடிப்படையில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

திரு. சரண குணவர்தன அவருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட மூன்று குற்றச்சாட்டுகளுக்கும் குற்றவாளியாக்கி குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டது.

ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் அவருக்கு ஒரு வருடம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு 3 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன் மேலும், ஒவ்வொரு வாகனத்திற்கும் 100000.00 வீதம் ரூபா 300000.00 அபராதம் விதித்து உத்தரவிடப்பட்டது. அபராதத்தினை செலுத்தத் தவறினால், தலா 6 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டது.

**2. முன்னாள் ஜனாதிபதியின் ஆளணிப் பிரதானி கலாநிதி ஐ.எச்.கே. மகாநாமா மற்றும் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் பி.திசநாயக்க ஆகியோருக்கு எதிராக ரூபா.100 மில்லியன்களை இலஞ்சமாக கோரி ரூபா 20 மில்லியன்களை இலஞ்சமாக பெற்றுக் கொண்டமைக்கு, முறையே 20 ஆண்டு (2018)**

கலாநிதி ஐ.எச்.கே.மஹனாமாவுக்கு 20 ஆண்டுகள் கடுமையான சிறைத்தண்டனையும் ரூபா 65,000/= அபராதமும் 20 மில்லியன் குற்றப்பணமும் பி.பி. திசானாயக்கிற்கு 12 ஆண்டுகள் கடுமையான சிறைத்தண்டனையும், ரூபா 55,000/= அபராதமும் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

கந்தளாய் சீனித் தொழிற்சாலையின் முதலீடு தொடர்பாக இலங்கைக்கு வந்த ஒரு முதலீட்டாளரான தொழிலதிபர் திரு கே.பி.நாகராஜா என்ற இந்திய குடிமகன் அளித்த முறைப்பாட்டின் பேரில் இந்த விசாரணை தொடங்கப்பட்டது. 1 வது குற்றம் சாட்டப்பட்ட கலாநிதி ஐ.எச்.கே.மஹனாமா 2015 முதல் 31.03.2018 வரை காணி அமைச்சின் செயலாளராக இருந்தார்.

அவர் யூலை, 2018 முதல் 03.05.2018 வரை ஜனாதிபதியின் தலைமைப் பணியாளராக இருந்தார். (சுற்றிவளைப்பு திகதி). 2 ஆவது குற்றம் சாட்டப்பட்ட திரு. பி. திசானாயகே அரச மரக்கூட்டுத்தாபனத்தின் தலைவராக இருந்தார். ஆரம்பத்தில், 1 ஆவது குற்றம் சாட்டப்பட்டவர் 3 மில்லியன் அமெரிக்க டொலர் இலஞ்சம் கோரியிருந்தார். புகார்தாரருக்கு கந்தளாய் சீனித்தொழிற்சாலையின் இடம், கட்டமைப்புகள் மற்றும் இயந்திரங்களை முழுமையாக வைத்திருப்பதைப் பாதுகாக்க.

அதன்பிறகு 1 ஆவது குற்றம் சாட்டப் பட்டவர் மற்றும் 2 ஆவது குற்றம் சாட்டப்பட்டவர் ரூபா 100 மில்லியனையும், ரூபா 20 மில்லியனையும் 03.05.2018 அன்று உபாய அலுவலருக்கு முன் ரூபா 100 மில்லியனில் முன்கூட்டியே பெற்றுக் கொண்ட போது அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அதே நேரத்தில் 20 மில்லியன் குறிக்கப்பட்ட நாணயத்தாள்களை இலஞ்சமாக ஏற்றுக்கொண்டனர். சந்தேக நபர்கள் இருவருமே நிரந்தர நீதாய மன்றின் முன்பாக குற்றஞ்சாட்டப்பட்டனர்.

இந்த வழக்கு ஏறக்குறைய 3 மாத காலத்திற்கு தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டது. இதில் 22 சாட்சிகள் 116 ஆவணங்களை 62 வழக்குப் பொருள்களுடன் அணைத்தனர். 2019 டிசெம்பர் 19 ஆம் திகதி விசாரணையின் முடிவில், குற்றம் சாட்டப்பட்ட இருவரையும் குற்றவாளிகளாக்கி தீர்ப்பளிக்கப்பட்டது.

**குறிப்பு- 11.01.2023 அன்று, உச்ச நீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் கொண்ட அமர்வு, முன்னாள் ஜனா திபதியின் தலைமை அதிகாரி ஐ.எச்.கே. மஹாநாம மற்றும் அரச மரகூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் பி.திசநாயக்க மீது 2019 டிசெம்பர் 19 அன்று வழங்கப்பட்ட கொழும்பு உயர் நீதிமன்ற விசார ணைத் தீர்ப்பை ஏகமனதாக உறுதி செய்தது.**

**3. செவனகல பொலிஸ் நிலையத்தின் முன்னாள் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவருக்கு 04 வருடங்கள் கடூழிய சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பு (2019)**

செவனகல பொலிஸ் நிலையத்தின் 10 ஆவது மைல் பொலிஸ் காவல் நிலையத்தில் பணிபுரிந்த முன்னாள் பொலிஸ் சார்ஜன்ட் கொடித்துவக்கு கங்கானம்லாகே புத்ததாஸ என்பவருக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரத்தின் பிரகாரம் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஏ. கே. எம். பட்டபந்திகே அவர்கள் நான்கு குற்றச்சாட்டுக்களுக்கும் குற்றவாளியாக்கி 12.12.2019 அன்று 4 வருடங்கள் கடூழிய சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளார்.

செவனகல பொலிஸ் நிலையத்தின் 10 ஆவது மைல் பொலிஸ் காவல் நிலையத்தில் பணிபுரிந்த முன்னாள் பொலிஸ் சார்ஜன்ட் கொடித்துவக்கு கங்கானம்லாகே புத்ததாஸ என்பவர் 2011 ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் 02 ஆம் திகதி அல்லது அண்மித்த திகதி ஒன்றில் கமஆச்சிகே ஹேமபால என்பவரை சட்ட விரோத கஞ்சா நாற்றுக்களுடன் கைது செய்து அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்காதிருக்க ஊக்குதல் அல்லது வெகுமதி என்ற முறையில் ரூபா. 12000/= பணத்தினை அவா நிறைவாக முறைப்பாட்டாளரான அவரிடம் பரிந்து கோரியதுடன் அதில் ரூபா.6000.00 பிறிதொரு தினத்தில் பெற்றுக் கொண்டுள்ளார்.

ஆணைக்குழுவின் திறந்த விசாரணைப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் இறுதியில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரத்தில் முன்வைக்கப்பட்ட நான்கு குற்றச்சாட்டுக்களில் இரண்டில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட அவருக்கு ஒரு குற்றத்திற்கு 4 வருடங்கள் வீதம் மொத்தம் 8 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது.

அத்துடன் நான்கு குற்றச்சாட்டுக்களுக்கும் ஒன்றுக்கு ரூபா 2500.00 வீதம் ரூபா 10000.00 குற்றப் பணமாகவும் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டதுடன் அதனை செலுத்தத் தவறினால் 6 மாதம் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டதுடன், ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 26 இன் அடிப்படையில் ரூபா 6000.00 தண்டம் விதிக்கப்பட்டதுடன் அதனை செலுத்தத் தவறினால் 1 வருட கடூழிய சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது. மேற்படி பிரதான தண்டனை காலம் ஒரே தடவையில் செல்லும் வகையில் நீதிபதி கட்டளை பிறப்பித்தார்.

**4. அட்டாளைச்சேனை கமத்தொழில் சேவை மத்திய நிலையத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் இலிகிதருக்கு முறையே 16 மற்றும் 04 வருடங்கள் கடூழிய சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பு. (2019)**

அட்டாளைச்சேனை கமத்தொழில் சேவை மத்திய நிலையத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் அப்துல்லதீப் அப்துல் கனி என்பவருக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலத்துங்க அவர்கள் 19.09.2019 அன்று 16 ஆண்டுகளும் அவருக்கு உதவிய குற்றச்சாட்டின் பேரில் இலிகிதராக பணிபுரிந்த சுலைமான் லெப்பை முனாஸ் என்பவருக்கு 4 ஆண்டுகளும் கடூழிய சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளார்.

அட்டாளைச்சேனை கமத்தொழில் சேவை மத்திய நிலையத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தர் அப்துல்லதீப் அப்துல் கனி என்பவர் 2015 ஆம் ஆண்டின் செப்டெம்பர் மாதம் 16 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த தினமொன்றில் சம்சுதீன் முஹம்மத் அஜ்மான் என்பவருக்கு வயற்காணி ஒன்றினை அவரது பெயரில் மாற்றிக் கொடுப்பதற்கு ஊக்குதல் அல்லது வெகுமதி என்ற முறையில் ரூபா. 8000/= பணத்தினை அவாநிறைவாக முறைப் பாட்டாளரான அவரிடம் பரிந்து கோரியதுடன் அதனை தனது இலிகிதர் மூலம் பெற்றுக் கொண்ட போது ஆணைக்குழுவின் சுற்றிவளைப்புப் பிரிவினால் கைது செய்யப் பட்டு தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரத்தில் முன்வைக்கப்பட்ட நான்கு குற்றச்சாட்டுக்களில் குற்றவாளியாக இனங்காணப்பட்டது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெடுக்குநாறி...

வவுனியா வடக்கு, ஒலுமடு, வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயம் தொல்பொருள் திணைக்களத்தால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன், குறித்த பகுதியில் புத்தர் சிலையும் வைப்பதற்கு முயற்சிகள் இடம்பெற்றிருந்ததுடன், ஆதிசிவன் ஆலய விக்கிரகங்களும் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் உடைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் பல்வேறு போராட்டங்கள் மற்றும் வழக்கு விசாரணைகளின் பின்னர் தொல்பொருட்களை சேதப்படுத்தாது வழிபாடு செய்வதற்கு வவுனியா நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தது.

இந்நிலையில், ஆலய நிர்வாகத்தினர் மற்றும் பூசகர் ஆகியோரை அழைத்த நெடுங்கேணி பொலிஸார், அவர்களிடம் 2019-2020ஆம் ஆண்டு வருடாந்த திருவிழாவிற்கு அனுமதி தந்தது யார்?, 2019ஆம் ஆண்டு ஏணிப்படி அமைப்பதற்கு நிதி உதவி வழங்கியது யார்?,

ஏணிப்படியினை மலைக்கு கொண்டு சென்று நிறுவியவர்கள் யார்?, 2019-2020ஆம் ஆண்டு திருவிழாவிற்கு ஒலிபெருக்கியினைப் பயன்படுத்த அனுமதி தந்தது யார்?, 2019ஆம் ஆண்டு ஆலய சூழலை அடையாளப்படுத்தும் நோக்கில் சில முக்கிய மரங்கள், தொல்பொருள் சாராத இடங்களுக்கு வெள்ளைநிற சுண்ணாம்பு பூசப்பட்டிருந்தது. அதனை செய்தது யார்? என விசாரணைகளை மேற்கொண்டு வாக்குமூலத்தை பதிவு செய்ததாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (ம-7,250)


லக்கி 7 VIP
திகதி 2023.12.12
சீட்டிழுப்பு இலக்கம் 0152
U 1 2 0 6 4 8 U
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.12.12
சீட்டிழுப்பு இலக்கம் - 1356
G 06 17 48 80 G
ஆங்கில எழுத்து
வெற்றி இலக்கங்கள்
Double Chance
13563
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3568
சீட்டிழுப்பு திகதி 12.12.2023
ஆங்கில எழுத்து
வெற்றி இலக்கங்கள்
O 58 65 70 73
O
38989
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.12.12
சீட்டிழுப்பு இலக்கம் 0635
வெற்றி இலக்கங்கள்
தனுசு 21 32 48 54 தனுசு
20996
தேசிய லொத்தர் சபை
25

மஹஜன சம்பத
திகதி 2023/12/12
சீட்டிழுப்பு இலக்கம் 5326
ஆங்கில எழுத்து
வெல்லப்பட்ட இலக்கங்கள்
G 6 7 3 4 8 2
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 12/12/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1674
வெற்றி இலக்கங்கள்
K 01 10 13 38 77
45277
தொலைபேசி: 0112-470662, 0114-607000
www.nlb.lk


## கிளிநொச்சியில்...

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கிளிநொச்சி பூநகரி குளத்திலிருந்து 700 மெகாவொட் சூரிய மின்சக்தி உற்பத்தியை மேற்கொள்ள அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்த மின் உற்பத்தியை மேற்கொண்டு நமக்கு மின்சாரம் வழங்குவதற்காக நாம் மின்சார கொள்முதல் ஒப்பந்தம் ஒன்றை கைச்சாத்திட வேண்டும்.

இவ்வாறு அவர்கள் உற்பத்தி செய்யும் மின்சாரத்தை நாம் கொள்வனவு செய்வதற்காக மேற்கொள்ளப்படும் ஒப்பந்தத்தின் பெறுமதி எவ்வளவு என்பதை அறிந்து கொள்ள விரும்புகின்றேன்.

இந்த ஒப்பந்தத்திற்கு அமைவாக ஒரு அலகு மின்சாரத்தின் பெறுமதி 50 ரூபாயாகும்.

சூரிய மின் உற்பத்தி நாட்டில் அதிகரித்தால் மின்சார கட்டணங்கள் குறைவடையும் என்ற பாரிய எதிர்பார்ப்பு ஒன்று நம் நாட்டு மக்களுக்கு இருக்கின்றது.

ஆகவே இது தொடர்பில் தெளிவுபடுத்துங்கள். அதேநேரம் இவற்றுக்கு வெளிப்படையான விலைமனுக்கோரல்கள் முன்வைக்கப்படுவதில்லை. அனைத்தும் மறைவாகவே முன்னெடுக்கப்படுகின்றன" என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## பட்ஜெட்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் 2024ஆம்ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நவம்பர் 13ஆம் திகதி பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## பாடசாலைகள்...

ஸார் தெரிவித்தனர்.

வவுனியா, சாளம்பைக்குளம் பகுதியில் உள்ள அல் அக்ஸா வித்தியாலயம் மற்றும் ஆயிசா வித்தியாலயம் என்பவற்றுக்குள் நுழைந்த திருடர்கள் பாடசாலை கதவுகளை உடைத்துள்ளதுடன், பாடசாலையில் இருந்த மோட்டர்கள், மின்விசிறிகள் என்பவற்றையும் கொண்டு சென்றுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் பாடசாலை அதிபர் மற்றும் நிர்வாகத்தால் பூவரசன்குளம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-7,250)

## வட மாகாணத்...

மாதத்தில் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

இந்த நிலையில், குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக, கொரிய சுற்றுலா நிறுவனத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று தெரிவு செய்யப்பட்ட இடங்களுக்கு அண்மையில் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தது.

இதன் பின்னர் அனைத்து கருத்திட்டத்தையும் ஒரேதடவையில் ஆரம்பிப்பதற்காக உடன்பாடு எட்டப்பட்டது.

இதற்கமைய, கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்றவகையில் இருதரப்பினருக்கும் இடையில் திருத்தப்பட்ட ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் குறித்து சுற்றுலாத்துறை அமைச்சர் சமர்ப்பித்துள்ள விடயங்களுக்கு, அமைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அமைச்சரவை உடன்பாடு தெரிவித்துள்ளது. (ம-7)

## செயற்கை...

யாழ்ப்பாணத்தில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்திற்கு 100 மெற்றிக் தொன் சீனி கூட்டுறவு சமாசம் ஊடாக கிடைத்திருப்பதாக தகவல் கிடைத்துள்ளது. இதை உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்த முடியவில்லை.

சீனியின் கட்டுப்பாட்டுவிலையை மீறி விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. சீனி தனியார் இறக்குமதியாளர்களிடம் இருப்பதாகவும் செயற்கைத் தட்டுப்பாடு ஏற்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சீனி பதுக்கி வைத்திருந்தால் நுகர்வோர் அதிகார சபை ஊடாக அவற்றை வெளிக்கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (ம-7,33)

## ஒவ்...

இலங்கை உற்பத்தியாளர்களின் பொருட்களை நுகர்வோருக்கு விற்பனை செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக டானியா அபேசுந்தர கூறியுள்ளார்.

கொழும்பில் விசேட செய்தியாளர் மாநாட்டை நடத்தும்போதே ஸ்ரீலங்கா ஐக்கிய வர்த்தகர் சங்கத்தின் தலைவர் டானியா அபேசுந்தர மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## ஐ.எம்.எப்...

இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி இது தொடர்பில் கருத்து வெளியிட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு 48 மாதங்களுக்கு நீடிக்கப்பட்ட கடன் வசதியை வழங்குவதற்கான ஏற்பாடுகள் தொடர்பில் முதலாவது மீளாய்வு நடவடிக்கைகளுக்காக சர்வதேச நாணய நிதியத்தின் செயற்குழு நேற்று கூட்டம் இடம் பெற்றது.

எதிர்பார்த்த அரச வருமானத்தை பெற்றுக்கொள்ள முடியாத காரணத்தினால் இந்தக் கடன் வழங்கப்பட்டுள்ளதாக பந்துல குணவர்தன மேலும் தெரிவித்தார். (ம-7)


உத்தியோகபூர்வ முடிவுகள்
12.12.2023 வெற்றி வாரம் 034 வர்ணம் சிவப்பு
ஆங்கில எழுத்து/ பாளஸ் ஆங்கில எழுத்து மற்றும் வெற்றி இலக்கம்
J 5 4 3 7 7 3
செகண்ட் சான்ஸ் விசேட இல. ரு.100,000/- பணப் பரிசுகளுக்கு 62169
த்த சுப்பர் ஜக்பொட் ரு. 23,706,467.20
DLB
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2300 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.12.12 தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள்
20 46 51 71 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,064,716/-
செகண்ட் சான்ஸ் விசேட இல. 31431
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
திகதி 2023.12.12 வெற்றி வாரம் 4461 வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள்
09 13 14 17 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.66,627,116.00
செகண்ட் சான்ஸ் விசேட இல. ரூ.100,000/- பணப்பரிசு 91871
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி SASIRI
வெற்றி வாரம் 414
சீட்டிழுப்பு திகதி 2023.12.12
ஊதா
வெற்றி இலக்கங்கள்
32 | 45 | 49
08
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,956,720/-
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4012 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.12.12 தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள்
07 26 44 61
மேடம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 6,121,668/-
292184
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
F 01 10 20 36 41
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1476
வர்ணம் வெளிர் இளஞ்சிவப்பு
திகதி 2023.12.12 செவ்வாய்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 476,566,014.20
DLB DEVELOPMENT LOTTERIES
தொலை பேசி : 011-2 333 546-47
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 2126
வர்ணம் : கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2023.12.12
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.75,598,392/-
வெற்றி இலக்கங்கள்
19 38 52 72 K
ரூ.100,000/- பணப் பரிசுகளுக்கான விசேட இலக்கங்கள் 343076
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நம

## யாழ். மாவட்ட விஸ்வகர்ம நகைத் தொழிலாளர் சங்கம்
## கௌரவிப்பும் கண்ணாடி வழங்குதலும்

2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் புலமைப்பரிசில் பரீட்சையில் 140 புள்ளிகளுக்கு மேல் பெற்ற விஸ்வகுல நகைத் தொழிலாளர்களின் பிள்ளைகளை கௌரவித்தலும் வருமானம் குறைந்த நகைத்தொழில் செய்து கொண்டிருக்கும் கண்பார்வை குறைபாடு உடைய நகைத் தொழிலாளர்களுக்கு கண் பரிசோதனை மேற்கொண்டு பெறுமதி வாய்ந்த மூக்கு கண்ணாடியும் வழங்க உள்ளோம்.

உங்கள் விண்ணப்பங்களை 31.12.2023 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

Whatsapp:
**077 222 8482**

T.P :
**077 236 7494**

இல.213/1,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

ஜெ.மனோகர்
செயலாளர்.

(18210)

## உடனடி வேலைவாய்ப்பு

1. காசாளர்
2. காட்சியறை முகாமையாளர்கள்
3. விற்பனை உதவியாளர்கள்
4. களஞ்சிய பொறுப்பாளர்கள்
5. களஞ்சிய உதவியாளர்கள்
6. அலுவலக உதவியாளர்கள்

(C-7883)

மேற்படி பதவிகளுக்கு பொருத்தமானவர்கள் தங்கள் சுயவிபரத்தை **077 310 7823** என்ற Whatsapp இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்.

## A/L - 2023
மாணவர்களுக்கான...
### புவியியல் கருத்தரங்கு
– வளவாளர் –
## N.பாபு

டிசம்பர் - 15,16,17,18 ஆம் திகதிகளில்
ஆரம்பம் - 15.12.2023
வெள்ளி 2 Pm
புதிய வெளி மாணவர்களுக்கும் அனுமதி வழங்கப்படும்.

(18203)

**DMI**
ஸ்ரான்லி வீதி,
ஆரியகுளம்,
யாழ்ப்பாணம்.
077 936 5087

## Canada and Italy Visa

(Canada, Italy, UK, USA) Work visa, Visitor visa, students visa & business visa செய்து தரப்படும்.மேலும் சகல நாடுகளுக்கான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

பணியாளர் தேவை

**VISA CONSULTANT**
134, Adiyapatham Road,Thirunelvely, Jaffna.
**077 038 5584**

(18168)

## காணி விற்பனைக்கு

GOLDEN Real Estate

**கைதடிச் சந்திக்கு அருகாமையில் 24 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்குண்டு.**

- கைதடிச் சந்தியில் இந்து 250m தூரத்தில்
- வங்கிகள் தபால் நிலையம் 200m தூரம்
- 20 அடி பாதை
- A9 வீதியில் இருந்து இரண்டாவது காணி (50m தூரம்)
- நன்னீர் ஊற்று நிலம்
- இரண்டு பிரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- சித்த போதனா வைத்தியசாலைக்கு நேர் எதிராக அமைந்துள்ளது.
- வீடுகள் கட்டுவதற்கும் மண்டபங்கள் அமைப்பதற்கும் சிறந்த காணி
- வடமாகாண சபை அலுவலகம் 300m தூரத்தில்
- சித்த மருத்துவபீட பல்கலைக்கழகம் 200m தூரத்தில்
- அனைத்து ஆவணங்களையும் சரிபார்த்து கொள்முதல் செய்து கொள்ளமுடியும்
- பார்வையிடும் நேரம் காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

(18212)

**077 468 3354,076 755 8606**

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378
076 097 3127

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம். நெல்லியடி. பருத்தித்துறை. சாவகச்சேரி. கொடிகாமம். கிளிநொச்சி. மானிப்பாய். சுன்னாகம். அச்சுவேலி. சங்கானை வல்வெட்டித்துறை. உடுப்பிட்டி. முல்லைத்தீவு. வவுனியா. மன்னார் ஆகிய பகுதிகளில்


வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும்.

(18185)

**076 825 7716 (ஆகாஸ்)**

## துயர் பகிர்வு அறிவித்தல்

தோற்றம்
28 - 01 - 1940



மறைவு
09 - 12 - 2023

## கந்தையா சதாசிவம்

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தையா சதாசிவம் அவர்கள் 09.12.2023 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - மாணிக்கம் தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் பராசக்தியின் ஆருயிர்க் கணவரும் சுபாஸ்கரன்(ஆசிரியர்-புனித ஹென்றி அரசர் கல்லூரி, இளவாலை), சுதாயினி(கனடா), செல்வாஜினி(அபிவிருத்தி உத்தியோகத்தர், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்), சுமாலினி(லண்டன்), முரளிகரன்(ஐங்கரன் ஸ்டோர்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தயாளினி(அபிவிருத்தி உத்தியோகத்தர் வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்), பகிரதன்(கனடா), ராஜ்குமார்(Mahaan Enterprises), திருமுருகன்(லண்டன்), மயூரி ஆகியோரின் அன்பு மாமனாரும் மானசன், அஸ்விதா, இலக்கியா, நந்திகா, குந்தவி, கீதநிலவன், கீதகி, தாமீரன், தருணிகா, சகீசன், சஸ்விகா ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான நடராசா, துரைராசா, முத்துப்பிள்ளை, இராசா, தம்பித்துரை, ஞானம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் மற்றும் சரோஜினிதேவி, இந்திரா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று 13.12.2023 புதன்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

(18184)

பாப்பாதோட்ட வீதி,
இணுவில் மேற்கு, இணுவில்.
077 994 4439

தகவல்:
குடும்பத்தினர்

A/L தொழினுட்பப்பிரிவு

**Techna**
Technical institute
Smart thinking leads to innovate

**விசேட செயலமர்வு**
077 170 3549
வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம்.

## A/L 2023
தொழினுட்ப பிரிவு மாணவர்களுக்கான
**கருத்தரங்கு**

உயிர்முறைமைகள் தொழினுட்பவியல்
M.விஷ்ணு
16, 17 DEC காலை 8.00 - 12.00 மணி வரை

பொறியியல் தொழினுட்பவியல்
S.மயூரதன்
16, 17 DEC காலை 8.00 - 12.00 மணி வரை

தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
S.சக்தி
16, 17 DEC மாலை 12.30 - 4.30 மணி வரை


தகவல் தொடர்பாடல் தொழினுட்பம்
T.லவன்
விவசாய விஞ்ஞானம்
S.சஜீபன்
கணிதம்
T.சசிகரன்
புவியியல்
S.Pகரன்

(18213)

23, 24 DEC காலை 8.00 - 12.00 மணி வரை

அனுமதிகளுக்கு 15/12/2023 முன் முற்பதிவுகளை நேரடியாக அலுவலகத்தில் மேற்கொள்ளவும்.

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## முருகுப்பிள்ளை கதிர்காமநாதன்
(சட்டத்தரணி)

பிறப்பு 05.02.1943
இறப்பு 13.12.2018

ஆண்டுகள் ஐந்து ஓடி மறைந்தது
ஏனோ ஆறவில்லை எம் மனத்துயர்
எம்மை வாழ்வில் உயர்வடையச் செய்ய
நீங்கள் செய்த தியாகங்கள்
எண்ணிலடங்காதது.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"திருவேரகம்"
கலைநகர், சித்தன்கேணி.
(18198)

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org